உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—உசு] பிரபவ-ஹு தைமீ [பகுதி—௩.

Vol. XXVI. January-February-1928. No. 3.

பிரகிருதிசாஸ்த்ரம்.

(PHYSICAL SCIENCE)

—(o)—

(மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிகசாஸ்த்ர ஆசிரியர்

ஸ்ரீமான் N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் M.A., எழுதியது)

பௌதிகம்.

(PHYSICS.)

II. உஷ்ணம் (HEAT.)

[சச—ம் பக்கத் தொடர்ச்சி.]

உஷ்ண இயந்திர இயல் (Thermodynamics):—உஷ்ணத்திற்கும் வேலையிபற்றும் சக்திக்தும் (Mechanical energy) உள்ள இயைபுகளை உணர்த்துவதே உஷ்ண இயந்திர இயலின் நோக்கமாகும். இழுப்புக்களை (Forces) எதிர்த்து வேலை (Work) செய்து அடக்க சக்தியையும் (Potential Energy) வேகசக்தியையும் (Kinetic Energy) உண்டுபண்ணலாம் எனப் பொருளியல்பு அதிகாரத்தின் (Properties of Matter) பகுதியாகிய இயந்திர இயலின்கண் (Mechanics) கூறப்பட்டுள்ளது. வேலைசெய்து உஷ்ணத்தை உண்டாக்கலாம். ஒரு இருப்பாணியை ஒரு கல்லின்மீது கிடத்தி அதை ஒரு இருப்புச்சுத்தியால் (Iron hammer) அடித்தால் ஆணி உஷ்ணமாகின்றது. இதனைச்

சிறிது ஆராய்வோம். பூமியிழுப்பாகிய (Force of Gravity) சுத்தியின் பளுவை எதிர்த்து அதனைக் கையினால் தூக்கி உயர்த்தவே வேலை செய்யப்படுகின்றது. இவ் வேலை (Work) உயர்த்திநிறுத்திய சுத்தியில் அடக்கசக்தியாக (Potential Energy) நிற்கின்றது. சுத்தியானது உயர்ந்தநிலையிலிருந்து கீழேயுள்ள ஆணியைநோக்கிச்செல்லவே அதனுடைய அடக்கசக்தி வேகசக்தி (Kinetic Energy) யாக மாறி விடுகின்றது. அது ஆணியில் தாக்கி நின்றுவிடவும், அதன் வேக சக்தியெல்லாம் அழிந்துவிடுகின்றது. எனவே, சுத்தியிலிருந்த வேக சக்தி எவ்வாறாயிற்று? சுத்தியினின்று நீங்கிய வேகசக்தியானது உஷ்ணம் எனப்படும் சக்திவிசேஷமாக மாறிவிட்டது. ஒருகலோரி (Calorie) அளவு உஷ்ணசக்தியை உண்டாக்குவதற்கு வேண்டிய வேலை சக்தி (Mechanical Energy) இத்தனை ஜவுல்கள் (Joules) என ஆராய்ச்சி முறைகளாற் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு கலோரி உஷ்ணசக்திக்குச் சமமான வேலை சக்தியளவுக்கு உஷ்ணவேலைச்சமம் (Mechanical Equivalent of Heat) எனப் பெயர். இந்த உஷ்ணவேலைச்சமம் பற்பல பெரிய ஆசிரியர்களாற் பற்பலவிதமான வெகுநுண்ணிய கருவிகளைக்கொண்டு ஆராயப்பெற்று, யாவருக்கும் ஒரே அளவினதாகக் கிடைத்தது. அவர்களது ஆராய்ச்சிகளிலிருந்து

1 கலோரி 4·2 ஜவுலுக்குச் சமம்,

எனக் கிடைக்கின்றது.

உஷ்ணம் வேகசக்தியின்பரிபாகமே (Manifestation of Work Energy) என்பதற்கு அணுத்த்துவம் (Kinetic Theory) ஆதரவு அளிக்கின்றது. இங்கு அணுதத்துவத்தைச் சிறிது சுருக்கிக்கூறல் தகும். பனிக்கட்டியாகிய கடினப்பொருளில் ஒரு கிராம் எடுத்துக் கொள்வோம். பனிக்கட்டியானது தண்ணீர்ப்பொருளின் அணுத்தொகுதியேயாகும். ஒவ்வொரு அணுவுக்கும் நிறை (Mass) உண்டு. இக் கடினப் பொருளில் ஓரணுவானது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லுதல் இயலாது; ஏனெனில் அணுக்கள் நெருக்கமாயிருக்கின்றன. ஆனால், அது தன்னிடத்திலேயே நின்று பம்பரம் சுழல்வது போலச் சுற்றிக்கொண்டிருக்கலாம். இப்படிச் சுழல்வதாற் பனிக்கட்டியிலுள்ள அணுக்கள் வேகசக்தியோடு பொருந்தியிருக்கும். இந்த ஒரு

கிராம் பனிக்கட்டிக்கு 79·6 கலோரி உஷ்ணத்தை அளித்தால் ஸ்திதி மாற்ற இயலில் மறைத்த உஷ்ணம் (Latent Heat) என்கிற சந்தர்ப் பத்திற்கூறியவாறு பனிக்கட்டி தண்ணீராக மாறும். இந்த நீரானஸ்திதி யில், ஓர் அணுவை எடுத்துக்கொண்டால், அதற்குப் பனிக்கட்டியி லிருந்தபோதுள்ளதைக்காட்டிலும் சஞ்சரிப்பதற்குச் சுவாதீனம் அதிக மாயிருக்கின்றது. இந்த அணுவானது தன்னிருப்பிடத்தைச் சிறிது மாற்றிக்கொண்டு ஓடலாம். இருந்தாலும், இதனைச்சுற்றி இதைப் போன்ற அணுக்கள் பலவும் நெருங்கியிருத்தலால் அதிகதூரம் ஓடற் கியலாது. எனினும், பனிக்கட்டிக்குள்ளேயிருந்தபோது அதுபெற்ற வேகசக்தியைக்காட்டிலும், இப்பொழுது சுழல்வது, ஓடுவது என்கிற இருவித இயக்கங்களை ஏற்றுக்கொண்டதனால் அதன் வேகசக்தி (Kinetic Energy) இப்பொழுது அதிகமே. இத்தருணம் ஒரு ஐய வினா எழலாம்; அது, 'கண்ணுக்குப் புலப்படாத அணு ஓடுகின்றது என்று கூற என்ன சாட்சியம் இருக்கிறது'? என்பதே. அணுக்கள் ஓடுவதைப் பிரத்தியட்சமாகக் காட்டியுள்ளார்கள். இதைக்காட்டும் பரிசோதனையில், நீர்ப்பொருளின்கண் ஏற்படும் பிரவுனின் இயக்கம் (Brownian movement) எனப்படுவதோர் இயக்கத்தை ஓர் உயர்தா- நுட்பதிருஷ்டிக்கண்ணாடியால் (Ultra-microscope) நோக்கியே அணுக் களின் அசைவு கொள்ளப்படுகிறது. இங்கு இதனை விரித்துக்கூறுதல் இயலாது என்றே விடுத்து, நமது ஒரு கிராம் தண்ணீரையே கவனிப் போம். இதற்கு வேண்டிய உஷ்ணத்தை அளித்து இதன் உஷ்ண நிலையை 100^0 செ. க்கு உயர்த்தி, மேலும் 538 கலோரியளித்து நீராவி யாக்குவோம். இந்நீராவியை ஓர் அடைத்தகூண்டில் (closed vessel) வைத்துக்கொள்வோம். கூண்டிலுள்ள அணுக்களின் இயக்கத்தை ஒரு திருஷ்டாந்தத்தால் உணர்த்துவது வழக்கம். ஒரு கண்ணாடிக்கூண்டினில் ஒருகோடி கொசுக்களை இட்டுவைத்தால், அவைகள் எப்படிச் சஞ்சரித் துக்கொண்டிருக்குமோ அப்படியே இவ்வணுக்களும் பலவாறுகச் சஞ் சரித்துக்கொண்டிருக்கும். பல ஆயிரம் அணுக்கள் ஒருங்குசேர்ந்து ஒட் டிக்கொண்டால் ஒரு கொசுவின் பருமன்பெறும் என்றால், அணுக்க ளின நுண்ணிய அளவு ஒருவாறு மனக்கண்ணுக்குத் தோன்றும். இது நிற்க, ஒருகன செ. மீ. (1 c c.) தண்ணீரை நீராவியாக மாற்றி னால் அதன் அளவு சுமார் 1700 கன செ. மீ. ஆகும். எனவே, ஓரணு

வுக்கும் மற்றோரணுவுக்குமுள்ள இடைவெளி மிகவும் அதிகமாகிவிடு கின்றது. ஆதலால் அணுக்களுக்கு ஓடித்திரிய மிகுந்த சுவாதீனம் உண்டாகின்றது. எனவே, அவற்றினது வேகசக்தியும் அதிகப்படு கின்றது. வாயுக்களுக்கு உஷ்ணமளித்தால் அவை பருக்கின்றன என் பதை விளக்கியுள்ளோம். எனவே, இந்நீராவிக்கு மேலும் உஷ்ணத்தை அளித்தால், அது விரிந்து, அதன் அணுக்களின் இடைவெளி அதிக மாகி, அவற்றின சஞ்சாரசுவாதீனம் அதிகப்படும். ஆகவே, ஒரு பொருளை எடுத்துக்கொண்டு அதற்கு உஷ்ணத்தை அளித்துச்சென் றால் அதனுடைய அணுக்களின் வேகசக்தி அதிகரித்துச் செல்லு கின்றது. இவ்வேகசக்தி அதிகப்படுகிறது என்கிற விஷயமானது, அணுக்கள் பாத்திரத்தின் சுவர்களைத்தாக்குவதாலேற்படும் அழுத்தத் தின்மிகுதியாற் கிடைக்கிறது. இவ்வாறாதலால் இவ்வணுக்களின் வேகசக்தியையே (Kinetic Energy) அப்பொருளில் வைக்கப்பட்ட தெருமாமீட்டராலுணரப்படும் உஷ்ணசக்தியாகக்கொள்ளலாம். ஏனெ னில், இப்பொருளை ஒரு இயந்திரத்திலிட்டு (Steam Engine இதனால் இழுப்புக்களை (forces) எதிர்த்து வேலைசெய்யப் பண்ணினால், அணுக் களிலுள்ள வேகசக்தி வேலை இயற்றுவதிற் செலவாகவும், இயற்றப் பெற்ற வேலைக்குத்தக்கவாறு பொருளிலுள்ள உஷ்ணத்தின் அளவு குன்றி உஷ்ணநிலை குறைந்துபோகின்றது. எனவே, அணுக்களின் வேகசக்தியும், அவற்றின் உஷ்ணசக்தியும் ஒன்றேயெனக்கொள்ளலாம்.

இனி, சர்வ சூன்ய உஷ்ணநிலை (Absolute Zero of Temperature, என்பதைப்பற்றிச் சிறிது கவனிப்போம். ஒரு கிராம் வாயுவை எடுத்துக்கொள்வோம். அதன் அணுக்கள் கொண்ட வேகசக்தியின் சமஷ்டியே அது உட்கொண்டுநிற்கும் உஷ்ணத்தின் அளவாகும். இந்தப்பொருளின் உஷ்ணத்தைக் கொஞ்சங்கொஞ்சமாக நீக்குவோம். இப்படி நீக்கிச்சென்றால் அணுக்களது வேகசக்தியின் சமஷ்டியும், பொருளின் உஷ்ணநிலையும் குறைந்துகொண்டே செல்லும். வாயுப் பொருள் நீர்ப்பொருளாகமாறும்; நீர்ப்பொருள் கடினப்பொருளாக மாறும். கடினப்பொருளாக மாறினபிறகும், அணுக்களில் வேகசக்தி இருந்துகொண்டிருக்கும். இவ்வேகசக்தி, (Kinetic Energy) பூரா வும் நீங்கி அணுக்கள் சலனமற்று (Motionless) ப்போகும்வரை உஷ்

ணத்தைக் கவர்ந்துவிடுவோம். இப்பொழுது, பொருளில் உஷ்ணசக்தியும் சூன்யமாகிவிட்டது. இவ்வஸ்துவில் வைக்கப்பட்ட தெருமாமீட்டர், சர்வசூன்ய உஷ்ணநிலையை (Absolute Zero of Temperature) உணர்த்தும். உஷ்ண இயந்திர இயலில் இந்தச் சர்வசூன்ய உஷ்ணநிலை -273^0 செ. என, ஏற்றமுறைகளான் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த உஷ்ணநிலைக்கு 0^0 மூலம் (0^0 Absolute) எனப் பெயரளித்தால் பனிக்கட்டி உருகும்பதமாகிய 0^0 செ. ஆனது, 0^0 மூலத்திற்கு மேல் 273^0 செ. அதிகமாதலால், பனிக்கட்டி உருகும்பதம் 273^0மூலம் எனக் கிடைக்கும். தண்ணீர் கொதிக்கும்பதம் செண்டிகிரேடு ஸ்கேலில் 100^0 செ. எனக் கூறப்படுகின்றதல்லவா ? இதனை முன்போலவே சர்வசூன்யநிலையைப் பூச்சியம் டிகிரியாகக்கொண்ட மூலஸ்கேல்முறையான் (Absolute Scale of Temperature) உணர்த்துங்கால், கொதிக்கும்பதம் $(100+273)$ அதாவது 373^0 மூலம், எனக் கிடைக்கும்.

மேலேகூறியபடி, அணுக்களிலுள்ள வேகசக்தியெல்லாம் அழிந்துநிற்கும்போது, உஷ்ணமும் நசித்து உஷ்ணநிலை சர்வசூன்யமாகின்றது. பொது அநுபவத்தில் உஷ்ணமானது, உயர்ந்த உஷ்ணநிலைகளிலுள்ள பொருள்களிலிருந்து குறைந்த உஷ்ணநிலையிலுள்ள பொருள்களுக்குப் போகும் இயல்புடையதாயிருக்கிறது. வஸ்துக்களுடைய உஷ்ணநிலைகளெல்லாம், உஷ்ணத்தின் செலவுகளினால், ஒருபான்மைப்பட்டு 0^0 மூலத்தை நோக்கிக் குறைந்துசெல்லும் இயல்பினவாயிருக்கின்றன. உலகப்பொருள்களில் உஷ்ணத்தின் பிரவிருத்தியைப் பொதுவாக ஆராய்ந்தால், உஷ்ணமானது உஷ்ணநிலை அதிகமானவஸ்துக்களிலிருந்து நீங்கி உஷ்ணநிலை குறைந்த வஸ்துக்களுக்குச் சென்று, அப்படிப்பட்ட செலவினால் வஸ்துக்களைச் சஞ்சரிக்கவைத்தலாகிய வேலையைச்செய்து, தான் அழிந்துவிட்டு, உலகப்பொருள் யாவற்றையும் ஒரே குறைந்த உஷ்ணநிலைக்குக் கொண்டுபோவதாகத் தெரிகின்

றது. நமது சூரியமண்டலத்தில் (Solar System) உள்ள உலகங்கள் யாவற்றுள்ளும் சூரியனுடைய உஷ்ணநிலையே மிக உயர்ந்தது. அதனுடைய உஷ்ணசக்தி எல்லாக்கிரகங்களுக்கும் வந்து, அவ்வவற்றிலுள்ள ஜீவராசிகளுக்கும் மற்றுமுள்ளவற்றுக்கும் இயங்குஞ்சக்தியை அளிக்கின்றது. இப்படி உஷ்ணத்தை அளித்துச்செல்லுதலான் அதன் உஷ்ணநிலை குறைந்துகொண்டேசெல்லுகின்றது. சூரியனிடத்திலுள்ள உஷ்ணநிதியானது மிகப்பெரிதேயெனினும், அளவுபட்டதேயாகும். பலகோடிவருஷங்களுக்குப்பின்பாவது யாதானுமொருநாள் அதன் உஷ்ணநிலை அதனோடுதொடர்புள்ள நமது பூமி முதலிய கிரகங்களுடைய உஷ்ணநிலைக்குச் சமமாகிவிடக்கூடும். சூரியனிடத்திலிருந்து கிடைக்கும் வருவாய் நின்றுவிடவே, ஒவ்வொருகிரகத்திலும் உஷ்ணநிலைகள் ஒருசமமாகி நசித்துச் சூந்யமாகும். சூரியன், கிரகங்கள் ஆகிய இவற்றோடுகூடிய சூரியமண்டலம் முழுதும் சர்வசூன்யநிலைக்கு வரும். சூரியனைச்சுற்றிவரும் கிரகங்களோடு கூடிய இச்சூரியமண்டலமானது (Solar System) இவ்விதம் நசிக்கவே, அவற்றுள், பலகோடியாண்டுகளாக இயற்றப்பெற்ற வேலைப்பயனெல்லாம் கேவலம் சூன்யமாகுமோ? அல்லது அவ்வேலைப்பயனெல்லாம் மற்றொரு சூரியமண்டலத்திற்றான் சென்று ஆங்கு உஷ்ணமாக அடங்குமோ? இந்தச்சூரியமண்டலம் அழியவும், அதில் மன்னும் உயிர்களுக்கு இருப்பிடமாகவேண்டி மற்றதோர் சூரியமண்டலந்தான் தயாராகிக்கொண்டிருக்கிறதோ? இத்தகைய வினாக்களுக்கு விடையளிப்பது வேதாந்திகளுக்கு ஒருகால் இயலும்; அரிய கற்பனாசக்திவாய்ந்த பெருங்கவிகளுக்கு ஒருகாற் கூடலாம்; ஆனால், பிரத்தியட்சப்பிரமாணிகர்களுக்கு இயலாது; அவர்களும் இத்தகைய விசாரங்களில் தலையிடமாட்டார்கள்.

இதோடு பிரகிருதி சாஸ்த்ரப் பகுதியாகிய உஷ்ணத்தை நிறுத்தி அடுத்த பகுதியாகிய ஒலி (Sound) என்பதை ஆராய்வோம்.

[தொடரும்.]

ஐந்திரம்.

'ஐந்திரம்நிறைந்த தொல்காப்பியன்' என்று தொல்காப்பியப் பாயிரத்திலே பனம்பாரனார் கூறியதாகக்கேட்கின்றோமேயன்றி ஐந்திரமென்பதுஎன்ன? அது எங்குளது? என்னசொல்வது? என்றவிவரங்களை அறிவதற்குற்ற சாதனங்கள் தமிழ்மக்களுக்கு இதுவரையிற் கிடைக்கவில்லை. தஞ்சையில் நியாயாதிபதியாக இருந்த A. C. பர்னல் என்ற துரைமகனார் ஐந்திரவியாகரணம் (On the Aindra Grammar) என்று ஆங்கிலத்தில் ஒரு சிறு கையேடு எழுதி 1875-ல் வெளியிட்டுள்ளார். அதினின்றும் பலவிஷயங்கள் தெரிவதால் அவற்றைத் தமிழ்ப்பெருமக்கள் அறியுமாறு ஒருவாறு சுருக்கமாக ஈண்டு வரைகின்றேன்.*

தற்காலத்தில் இந்தியசாஸ்திரங்களில் ஸம்ஸ்க்ருத இலக்கணங்கள் முக்கியமெனக்கருதி அறிஞர்பலர் அப்பகுதியை ஆராய்ந்துவருகின்றனர். இவ்வாராய்ச்சி சீரிய நோக்கத்தோடு நடைபெறினும் முற்றும் பயனுடையதாகக் காணவில்லை. இலக்கணங்கள் பலவாகலின் அவை ஒன்றற்கொன்று என்னசம்பந்த முடையவை? அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளென்ன? என்று கவனிக்கின்றார்களில்லை.

வொபதேவரது தாதுபாடத்திலே சொல்லப்பட்ட,

இந்த்ரஶ்சந்த்ர: காஶக்ருத்ஸ்நாபிஶலீ ஶாகடாயந:।
பாணிந்யமரஜைநேந்த்ரா ஜயந்த்யஷ்டாதிஶாப்திகா:॥

என்ற சுலோகத்தாலே ஸம்ஸ்க்ருத இலக்கணங்கள்செய்தார் எண்மர் என்று தெரிகிறது. ஆயினும் பாணினீயம் ஒழிய ஏனையவையெல்லாம் இறந்தனவென்றே சொல்லவேண்டியநிலையிலுள்ளன. சாகடாயனமும் சினேந்திரமும் ஏட்டுச்சுவடிகளில் உள்ளன. சந்திரகோமினது இலக்

* இவ்வுரைநடையுட் சிலபதங்கட்குத் தமிழ்மொழிபெயர்ப்புப் பொருந்தாமலிருக்கலாம். அவற்றைக்கண்ணுறும் நண்பர்கள் தயைசெய்து எனக்குக் கடிதமூலம் அறிவிப்பார்களாயின், பின் திருத்தமுறப்பதிக்க அனுகூலமாகும்.

கணம் திபேத்தியபாஷையி லிருக்கின்றது. இந்திரனாற் செய்யப்பட்ட தாகச் சொல்லப்படும் ஐந்திரம், காசகிருத்ஸ்நம், ஆபிசலம் முதலிய இலக்கணங்களுட் சில சூத்திரங்களை அங்கும் இங்கும் காண்கின்றோமே யன்றி நூன்முழுமையும் கண்டோமில்லை. வேதங்கட்குரிய பிராதி சாக்கியங்கள் இவற்றுட்படாவென்றும் அவை தனிப்பட்டவையென்றும் அறிஞர் கருதுகின்றனர்.

இந்திரவியாகரணமென ஒன்றுண்டோவெனப் பலமானசந்தேகமுண்டு. ஆயினும், ஆராய்ந்துபார்க்க அப்படிப்பட்டபெயரையுடைய ஒருதொகுதி யிலக்கண முண்டென்று தெரியவருகிறது. இதுவே மிகப்பழமையான தென்றும், பாணினிமுதலாயினோர் இதனை பெயர்த்தாண்டுள்ளாரென்றும் காட்டல் இயலும். அவ்வாறுசெய்யுமுன் இந்நூலைப்பற்றி முன்னாள் தொட்டு இந்நாள்வரை சீன, திபேத்தியமொழியுள்படப் பல்பாஷைகளி லும் என்னசொல்லப்பட்டிருக்கின்றதென்பதைத் தொகுத்துக் கூறு வோம்

'வர்ஷர் என்ற ஆசிரியருக்கு அநேகமாணாக்க ருண்டு. அவருள், பாணினியு மொருவர். இவர் ஒரு மந்தமதி. இதனைக்கண்ட வர்ஷர் மனைவி பாணினியை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டாள். பாணினி யோ இதனையாற்றாது சிவபிரானைக்குறித்துத் தவங்கிடந்து வரம்பெற்று எல்லாவற்றையுமறிந்து காத்யாயனருடன் வாதாடி அவர் ஓதிவந்த ஐந் திரவியாகரணத்தை யழித்தா' ரென்று சோமதேவரது கதாசரித்சாகரத்தி லே காத்யாயனர் கூறுவதாக ஒருகதை யுண்டு. பிரகத்கதாமஞ்சரியி லும் இப்படி யொருகதை யுண்டு. இது கேவலம் கதையென்றாலும் பாணினீயம் தோன்றியபிறகு ஐந்திர மென்றொருநூ லிருந்து அழிந்து விட்டதென்பது தெளிவுபெறுகிறது.

சீன யாத்திரிகனான யூவான்த்ஸாங் பின்வருமாறு தன் யாத்திரை களிற் கூறுகின்றார்:—"முன்னாளிற் சொல் அதிகமாயிருந்தன. பிரளய முண்டாயிற்று. எல்லாம் அழிந்துபட்டன. உலகம் பாழாய்க்கிடந் தது. இதனைக்கண்டு பிரமனும் இந்திரனும் தங்கள் இச்சையுண்டாக் கினர். இருடிகள் மொழிகளையுண்டாக்கப் பல மொழிகள் உலகமெங் கும் பரவலாயின. மக்களுக்கு வயது 100 ஆகச் சுருங்கிற்று. மொழியோ விளங்கவில்லை. இப்படியிருக்கையிற் சாலாத்துறை என்ற ஊரிலே

பாணினி யென்ற ஒரு இருடி தோன்றிச் சிவபெருமானது அருளாலே எல்லாவற்றையு மறிந்தனர். அவர் மக்களுக்கு வேண்டாதனவற்றை நீக்கி வேண்டியவற்றிற்கு விதிகளும் ஏற்படுத்தினர். பாணினிபகவான் தனது கொள்கைகளை நாட்டிற் பரப்பக்கருதி சிவபெருமானை வேண்ட அவரும் இவருக்கு ஆவன அருள்புரிவதாக வாக்களிக்கவே இவர் அந்நாள்தொட்டுத் தம் மதத்தைப் பரப்புவாராயினர். அதுவும் பரவுவதாயிற்று."*

ஹோய்லி (Hoei-Li) எழுதிய ஹியுவான் த்ஸாங் சரிதையில், இவர் நாளாந்தாசர்வகலாசாலையிற் பயின்ற விவரத்தைப்பற்றிக் கூறுகின்றார். அது பின்வருமாறு:—"பிரமநூல் (வேதம்) பயின்றார். இது பிரமனால் ஆதியிற்சொல்லப்பட்டதால் பிரமநூல் அல்லது வேதமென்று பெயர்பெற்றது. இதனைக் கல்பாரம்பத்திற் பிரமதேவர் தேவர்களுக்குச் சொன்னார். அவர்கள் மானுடர்க்குச் சொல்லினர். இதற்கு வியாகரணமென்று பெயர். இது முதலில் அநேக லட்சம் கிரந்தங்களையுடையதாக விருந்தது. அதனை இந்திரன் இலட்சம் கிரந்தங்களையுடையதாகக் குறுக்கினான். சாலாதுறையூரிற் பிறந்தவரான பாணினி என்பவர் அந்நூலை எண்ணாயிரம் (8000) கிரந்தங்களி லடக்கினார். தென்னாட்டிற்றோன்றிய பிராமணனொருவன் இதனை இரண்டாயிரத்தைஞ்நூறு கிரந்தங்களி லடக்கினான். இதுதான் இப்பொழுது வடநாடுகளில் அதிகமாகக் கற்கப்படுகிறது."

இவ்விவரத்தையடுத்துவரும் பாணினியின்சுருக்கம் யாதொரு வேற்றுமையுமின்றிக் காணப்படுதலினாலே இந்தச்சரிதத்தை மெய்யல்லவென்று புறக்கணிக்க இடமில்லை. புத்தமதக்கிரந்தங்கள் பலவற்றுள் இந்திரவியாகரணப்பெயர் காணப்படுவதோடு, அவதான சதகத்திற் சாரிபுத்தன் தனது பதினாறுமாண்டில் ஐந்திரம்படித்தானென்றும் சொல்லியிருக்கிறது.

திபேத்தியநூல் பல வடநாட்டிலே காணப்படும் புத்தமதக்கிரந்தங்களின் மொழிபெயர்ப்பேயன்றி வேறில்லை. பூஸ்தோ (Bu-Stow) என்

---

* இது பதஞ்சுபாஷ்யவிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. See Patanjali Maha Bashya.

பார் 'முதலிற் சர்வக்ஞராகிய சிவபெருமான் வியாகரணம் செய்தாரென்றும், அதனையொட்டி இந்திரன் வியாகரணம்செய்தான் என்றும், இவ் ஐந்திரத்தைப் பிரகஸ்பதி கற்றாரென்றும், பாணினிதோன்றித் தமது பாணினீயத்தைச் செய்ய ஜம்புத்தீவிலே ஐந்திரம் அழிந்துவிட்டது' என்றும் சொல்லுகிறார்.

திபேத்திய லாமாவான தாரநாதர் இந்திரவியாகரணத்தைப்பற்றி யெழுதும்போது இது பாணினிக்கு முற்பட்டதென்கிறார். சந்திரவியாகரணமும் பாணினீயமும் ஒன்றென்றும் கலாபமும் ஐந்திரமும ஒன்றென்று மெழுதுகிறார். இவரே ஆதிசேஷன்கதையைச்சொல்லிவிட்டுத் தென்னிந்தியப் பிராமணவகுப்பைச்சேர்ந்தவரான சப்தவர்மனென்பார் முருகக்கடவுளைத் தோத்தரித்து இந்திரவியாகரணம் தமக்கு உதயமாகவேண்டுமென்று விரும்பக் குமாரக்கடவுள் 'ஸிஜோவ்ணஸமாம்நாய' என்று அடியெடுத்துக்கொடுத்ததாயும், மற்றவையெல்லாம் தானே அவர்மனதில் உதித்ததாயும் ஒரு கதை எழுதுகிறார். இந்த ஸிஜோவண்ஸமாம்நாய என்பது கலாபமான காதந்திரத்திலே முதற்சூத்திரமாகும். இன்னும் இந்த சப்தவர்மனைக் காளிதாசன், நாகார்ச்சுனன் காலத்தவனென்று மெழுதுகிறார். பிறிதோரிடத்தில் இந்திரதுருவனென்றொரு அந்தணன் ஐந்திரம் கற்றவனென்றும், அவ் ஐந்திரம் இருபத்தையாயிரம் சுலோகங்களையுடையதென்று மெழுதுகிறார்.

இவைகளெல்லாம் கூறுவதில் யாதொரு பயனுமில்லை. பின்னர் பாணினி [பகவானே] ஐந்திரவியாகரணத்தை எடுத்தாண்டுள்ளாரென்று காட்டுவேன். 'வாசெவ்வாசாவ்யாக்ருதா என்ற ரிக்வேத சாயன பாஷியத்திலேயும் ஐந்திரத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

இதுவரையிற் கூறியவைதான் நம்பக்கூடிய ஆதாரங்களெனலாம். ஐந்த்ராவாநீ ஐவா என்று போஜசம்புவிலும் ஐந்த்ராஜ்யாவியஸ்யாஜம் என்று சாசுவதிவியாகரண உரையிலும் காணப்பட்டபோதிலும், இவை 12-ம் நூற்றாண்டிலிருந்த சிநேந்திரரைக் குறித்தாலும் குறிக்கக்கூடுமாகையால் அது நம்பக்கூடியதல்ல. ஜயினர் சாகடாயன வியாகரணமென்றொன்று குறிப்பிடுகின்றனர். அதனில் இந்திரனைப்பற்

றிக் குறிப்பிட்டுச் சொல்லுகின்றது. பூலர் (Buhler) பாணினீயத்திற் காணப்படுவதும் இதுவும் ஒன்றேயென்றெழுதுகிறார். ஆனால், கோல்ட்ஸ்டக்கர் (Goldstucker) என்ற ஆராய்ச்சியாளரோ இதனைச் சந்தேகிக்கிறார். மேற்கூறியவற்றால் முடிந்தமுடிபு என்னவெனின், பழமையானதாக ஒருநூலிருந்து அதனைப் பின்வந்தவரொருவர் புதுப்பித்திருக்க வேண்டுமென்று தோற்றுகிறதென்பதே.

இதுகாறும் எடுத்துக்காட்டியவைகளினின்று ஐந்திரமென ஒன்றுண்டென்பது உறுதிபெறுகின்றது.

இதனை யாராயவேண்டுமென்றுன்னித் தமிழிலக்கணமாகிய தொல்காப்பியத்தைப் பார்த்தபோது அதன் பாயிரத்தில் 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' என்றிருக்கக்கண்டேன். இதனைக்கண்டதும் இந்தத் தோல்காப்பியநூலையும் மற்றைய காதந்திரம், கச்சாயனரது பாலி இலக்கணம், பிராதிசாக்கியங்கள் என்பவற்றையும் ஆராய எண்ணங்கொண்டேன். முற்கூறிய மூன்றனையும் முதற்கண் ஆராய்ந்தபோது இவைமூன்றும் ஒருதிறப்பட்டனவென்று கண்டேன். அவற்றின் பாகுபாடு பின்வருமாறு:—

தோல்காப்பியம்.	காதந்த்ரம்.	கச்சாயனம்.
எழுத்ததிகாரம்.	சந்திப்பிரகாணம்.	சந்திகப்பா.
1 நூன்மரபு (எழுத்து விவரம் எண் பகுப்பு)	எழுத்துவிவரம், எண் பகுப்பு முதலிடன.	எழுத்துவிவரம் எண் பகுப்பு முதலியன.
2 மொழிமரபு	உயிரீற்றுப்புணரியல்	உயிரீற்றுப்புணரியல்
3 பிறப்பியல்	விதிவிலக்குகள்	விதிவிலக்குகள்
4 புணரியல்	மெய்யீற்றுப்புணர்ச்சி	மெய்யீற்றுப்புணர்ச்சி
5 தொகைமரபு	ஷை	நீக்கப்புணர்ச்சி
6 உருபியல்		
7 உயிர்மயங்கியல்		
8 புள்ளிமயங்கியல்		
9 குற்றியலுகரப்புணரியல்		

சொல்லதிகாரம்	நாமசதுஷ்டயம்	நாமகப்பா.
1 கிளவிபாக்கம்	வேற்றுமை முதலியவற்றின் பெயர்	வேற்றுமை யுருபுக ளூம் வேற்றுமைப் படுத்தலும்.
2 வேற்றுமையியல்	வேற்றுமையுருபுகள்	பிரதிப்பெயர் (தன்மைமுன்னிலை படர்க்கைப்பெயர்)
3 வேற்றுமை மயங் கியல்	பிரதிப்பெயர்	முறையற்ற பெயர்
4 விளிமரபு	காரகம்	....
5 பெயரியல்	சமாசம்	வேற்றுப்பிரதி
	6 தத்திதம்	காரகம்
		7 சமாசம்
		8 தத்திதம்
6 வினையியல்	ஆக்பாதப்பிரகணம்	ஆக்யாதகப்பா
தமிழில் இவை யில்லை.	1 செய்வினைசெயப்பாட்டு வினையும், காலமும்,	செய்வினைசெயப்பாட்டு வினையும், காலமும்.
	2 வினையின் பாகுபாடு	வினையின் பாகுபாடு
	3 இணைத்தல்	இணைத்தல்
	4 சம்பிரசாரணம்	
	5 குணம்	
	6 அனுசங்கம்	
	7 இடாகமம்	
	கிருத்பிரத்தியயங்கள் 1—6	கிருத்கப்பா
7 இடையியல்		
*8 உரியியல்		

*9 எச்சவியல் குறிக்கப்படவில்லை.

மேலேகாட்டிய இலக்கணமுறைகளெல்லாம் எல்லோராலும் இலகுவில் அறிந்துகொள்ளக்கூடிய அவ்வளவு இயற்கைத்தன்மையுடையது. இவை பிராதிசாக்கியங்களிலும் காணப்படுகின்றன. பெயர், வினை இடை யுரியாகிய நால்வகைச்சொல்லும் பொதுவானமுறையிற் கூறப்படுகின்றன.

எண்வகையினையுடைய பாணினீயத்திற் காணப்படும் (முறையோ) வெகு சிக்கலானது. அம்முறை வருமாறு:—

*I. சம்க்ஞை; ஏகாட்சரம்; சூத்திரவிருத்தி முதலியன.

II. ஸமாஸம்,

III–V. பெயர்வினைகட்குரிய பிரத்யயங்கள்.

VI & VII. ஸ்வரம், விபக்திமுதலியன.

VIII. சந்தி முதலியன.

சாகடாயனமும் சினேந்திரமும் பாணினீயத்தைப் பின்பற்றிச் செல்வன. மேலே குறித்துள்ள பகுதிகளால், பாணினீயமும் ஐந்திரமும் வேற்றுமையுடையனவென்பதும், ஐந்திரம் பலராலும் யாதொரு முயற்சியுமின்றி இலகுவில் அறிந்துகொள்ளற்பாலதாயிருக்கப் பாணினீயமோ ஆழ்ந்துபடித்துக் கற்றுக்கொண்டவர்க்கன்றிப் பிறருக்கு விளங்குந்தன்மையுடையதன் றென்பதும் போதரும். பாணினீய வைப்புமுறையும் ஐந்திர வைப்புமுறையும் வேற்றுமையுடையனவென்று காட்டப்பட்டதுபோலப் பெயர்வேறுபாடுகளும் பலவாம். ஐந்திரப்பெயர்களெல்லாம் எளிதில் அறியத்தக்கன. பாணினீயப்பெயர்களெல்லாம் குறியீடுபெற்றுள்ளன. தொல்காப்பியம், காதந்த்ரம் முதலியன ஐந்திரத்தையொத்துப் பெயர்பெறுவன. பாணினீயமோ அதற்கு முற்றும் வேறுபாடுடையது. அவ் வேற்றுமைகள் எவையென ஈண்டு ஆராய்வாம்.

சொற்களின் பாகுபாட்டை யெடுத்துக்கொள்வோம். 1. நாமம், 2. ஆக்யாதம். 3. உபசர்க்கம், 4. நிபாதம் என்பன. இம்முறையாக யாஸ்கர், காதந்த்ர ஆசிரியர், கச்சாயனர் முதலியோர் கூறுகின்றனர்.

*பாணினியின், அஷ்டாத்யாயி; இவருடைய பாகுபாடு இப்பொழுது விளங்கவில்லை. பர்னல் பெரும்பான்மைபற்றிப் பெயரிட்டிருப்பார் என்று தோன்றுகிறது.

பிராதிசாக்கியங்களிலும் இதேவிதமாகக் காணப்படுகின்றன. தமிழில், பெயர் வினை இடை உரி என நான்கு பாகுபாடு காணப்படுகிறது. தமிழில் உபசர்க்கங்களில்லை. பாதம் என்றசொல் மொழி, பதம் என்ற பொருளில் வழங்குகிறது. பாணினீயத்திற் சொல்லதிகாரம் பிறருக்கு இலகுவில் விளங்காதபடி அவ்வளவு சிக்கலானது. பாணினீயத்திலும் உபசர்க்கமும், நிபாதமும் இருந்தபோதிலும் ஐந்திரத்தைப்போல் இலகுவில் அறிந்துகொள்ளக்கூடியனவன்று. நாமம் என்பதற்கு, சுப் சுபந்தமென்றும், ஆக்யாதாவென்பதற்கு திங்சுந்தம் என்றும் காணப்படுகிறது. தெளிவான பெயர்கட்கெல்லாம் தெளிவற்றனவும், அறிதற்கியலாதனவுமான பெயர்களும் முறைகளும் உண்டு.

1. தமிழிலக்கணத்திலே வடமொழியிலக்கணங்களிற் காணப்படாத பகுபதங்கள், பகாப்பதங்கள் என்ற பாகுபாடுகள் காணப்படுகின்றன. பிராதிசாக்கியங்களிற் காணப்படும் இங்கிய அனுங்கிய என்பன, இப் பகுபதம் பகாப்பதங்களேயாம். ரிக்வேத பிராதிசாக்கியத்திலே உவடர் i–25 ல் நன்றாக இதனை வியவகரித்துள்ளார்.

2. தமிழில் முதலெழுத்துக்களில் ஒருசாரினை உயிரெழுத்து என்கின்றனர். காதந்த்ரம், பிராதிசாக்கியம், கச்சாயனம் என்பவற்றிலும் சுவரா, சாபா—என்று சொல்லப்படுகிறது. இவை இரண்டும் ஒன்றே மற்றொருசார் எழுத்திற்கான மெய்யின்பெயரும், காதந்திரத்திலும், கச்சாயனத்திலும் கூறப்படும் ஸ்பர்சமும் ஒன்றே. உயிரிலுள்ள குறிலும் நெடிலும் அவற்றிலுள்ள ஹ்ரஸ்வம் (ஹ்ரஸ்வம்) தீர்க்க (தீர்க்க)மும் ஒன்றே மெய்யெழுத்திற் காணப்படும் வன்கணம், மென்கணம், இடைக்கணமென்ற பாகுபாடு தமிழிற்குமாத்திரமுரியது. தமிழிலுள்ள எழுத்துக்களது இனத்தை வடமொழியாளர் உஷ்மான்? என்பர். புணர்ச்சியைச் சந்தியென்கின்றனர். தமிழெழுத்துக்கட்குச் சொல்லும் கரம், காரம், அகாம் முதலான சாரியை வடமொழியிலுள்ள காச்சாரியையின்பெருக்கமே.

3. ஒலிக்குறிப்பைப்பற்றிக் காதந்திரத்திலும், பிராதிசாக்கியத்திலும் சில ஒற்றுமையுடையனவாகக் காணப்படுகின்றன. தமிழிலும் பாலியிலும் அவை வேண்டப்படுவனவல்ல. சந்தியக்கரங்களைப்பற்றி முன்னவற்றிற் சொல்லப்படுகிறது. தமிழிற்கும் பாலிக்கும் மிகை

யாகையால் அவை சொல்லப்படவில்லை. சமான என்னுமுயிர்களுள் 'அ' முதல் 'ல்ரு' வரையிலுள்ள எழுத்துக்கள் முன்னிரண்டற்கும் பொது.

முற்கூறியவைகளோடு பாணினியை யொப்பிடுங்கால், பாணினீயத்தில் மாஹேசுரசூத்திரங்களிருப்பதால், இதனில் எழுத்துப்பாகுபாடு வேண்டுவதில்லை. வர்க்கங்கள் என்றுசொல்லிவிட்டால் இப்பாகுபாடு நிரம்பிவிடுகிறது. குறில் நெடில் என்ற பாகுபாடுகளைத்தவிர்த்து மற்றவை வேண்டப்படாதனவாம்.

4 ஒலிகள் பிறக்கின்ற கருவிகளை இடமெனத் தமிழிற்சொல்லுவர். பிராதிசாக்கியத்தில் ஸ்தானம் என்று சொல்லப்படுகிறது. நன்னூலார் இடம் ஸ்தானம் என்ற இரண்டுசொற்களையும் பேதமின்றி உபயோகிக்கின்றார். ஒலிபிறக்குமிடங்கள் உரம், கண்டம், உச்சி, மூக்கு என நான்கெனக்கூறுவர் தமிழர். வடமொழியிலும் உரஸ், கண்டம், சிரஸ் நாஸி என்ற இடங்களிற் பிறக்குமென்பர். ஒலி பிறக்கச் செய்யும் காரியத்தைத் தமிழர் 'முயற்சி' என்பர். வடமொழியாளர் 'பிரயத்னம்' என்பர். ஆனால் பாணினிமுனிவரோ, ஸ்தானத்தை ஆஸ்ரயமென்பர்.

5. தமிழிற்காணும் சொல்லளவான மாத்திரை வடமொழியில் 'மாத்ரா' என்று வழங்குகிறது. இந்த அளவே பாணினீயத்தி லில்லை.

6. தமிழிற்காணப்படும் வேற்றுமையும் வடமொழி விபக்தியும் ஒன்றேயாம். தமிழில் முதல், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு ஏழு, எட்டாம்வேற்றுமையென்று சொல்ல வடமொழியில் பிரதமா, த்விதீயா, த்ருதீயா, சதுர்த்த, பஞ்சம, சஷ்டி, சப்தம, அஷ்டம விபக்தி என்று சொல்லப்படுகிறது. காதந்தரத்தில் எட்டாம்வேற்றுமையை ஆமந்திரிதம் (ஸம்போதன) ஆமந்த்ரணமென்று கூறுகின்றனர். இதுவே விளிவேற்றுமையென்றும் சொல்லப்படும். பாணினீயத்தில் வேற்றுமை முடிபுகளை பதிகமாகக்கூறியிருக்கின்றது. எட்டாம்வேற்றுமையை 'ஆமந்திரித'மென்று சொல்லுவதுடன் 'சம்புத்தி' என்றும் சொல்வதுண்டு. இவ்விதமே காதந்திரத்திலும் கூறப்படுகின்றது.

வினைச்சொற்களை எடுத்துக்கொண்டு ஆராயும்பொழுது தமிழும் காதந்திரமும் ஒன்றுதானெனத் தோன்றுகிறது. தமிழில் வினைச் சொல் என்பதனைக் காதந்திரத்தில் ஆக்யாதாவென்று சொல்வர். ஆனால், கிரியை பின்னால் நிற்கிறது. இக் கிரியை என்பதுதான் பழம் பெயர். தமிழில் இறப்பு, நிகழ்வு எதிர் என முக்காலமும் ஏவல்வினை முற்று முண்டு. வடமொழியில் பூத பவிஷியத் வர்த்தமானமென்னும் முக்காலங்களும் உண்டு. தமிழ்த் தன்வினை பிறவினைகளுக்கு ஆத்மனே பதம், பரஸ்மைபதங்களு மேற்பட்டிருக்கின்றன. இவை செயப்படு பொருள்குன்றியவினை, செப்படுபொருள்குன்றாவினையால்விளக்கமாகும்.

பாணினீயத்திற் பெயர்ச்சொல்லிற் பலவிஷயங்கள் காணப்படாதன போலவே இவ்வினைச்சொல்லிலும் பலகாணப்படவில்லை. இவர் அந்தங் களைல், உயிர், ட்ங் என்பவற்றாலும் வேறு குறியாலும் கூறியும், ஐந்திரத் திற்கூறிய பெயர் கொண்டும் கூறியுமிருப்பதால் ஐந்திரம் நன்கு அறிந்தவ ரென்பது பெறப்படும். தமிழிற்காணப்படும் இடம், பால் இரண்டும் வட மொழியிற்காணப்படும் இடம் பாலுக்கு முழுதும் வேறுபட்டனவாகும். சாரியை என்ற தமிழ்ச்சொல் எவ்வாறு உபயோகப்படுகிறதோ அவ் வாறே வடமொழியில் ஆகமம் என்ற சொல் உபயோகப்படுகிறது. புணர்ச்சிகளுள் கேடுதல் என்பது வடமொழியில் லோபம் என்ற பெயரால் அதே பொருளில் வழங்குகிறது. (மெய்ம்மயக்கம் உடனிலை மயக்கங்களிலுள்ள) மயக்கமானது வடமொழியில் சம்யோகம் என்ற சொல்லால் வழங்குகிறது. இதுவரை கூறிய ஒற்றுமைப்பாடுகளி லிருந்து தமிழும் காதந்திரமும் ஒன்றென்பதும் பாணினீயம் வேறு என்பதும் புலப்படும். மேலும் ஐந்திரத்தில் ஒருபெயரிட்டு அழைப்ப தொன்றனைப் பாணினி ஒருகுறியீட்டால் வழங்குவர். குறியீட்டுச் சொற்கள் (Technical terms) ஒற்றுமையாகவிருப்பது கொண்டு பிராதிசாக்கியங்களையும் இவற்றோடு சேர்ப்பது நன்று.

[தொடரும்.]

இலக்கணவிளக்கம் வைத்தியநாததேசிகர்பரம்பரை

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

உ

தொல்காப்பியச்சொல்லதிகாரக்குறிப்பு.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்

ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்

எழுதுவது.

[ருசு-ஆம் பக்கத்தொடர்ச்சி]

18-வது சூத்திரம். இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே.

இச்சூத்திரத்தின்போருள்:—இனப்பொருளைச் சுட்டுதலின்றிப் பண்படுத்து வழங்கப்படும் பெயர் வழக்குநெறியல்ல, செய்யுணெறி.

இச்சூத்திரத்தில் "வழக்காறல்ல என்பதனை 'வழக்காற்றின் அல்ல' என ஐந்தாமுருபு விரித்து, 'அல்ல' என்பதனைப் பெயர்ப்படுத்துக்கூறும்; கூறவே, வழக்கிற்கும் இனமில் பண்புகொள்பெயர்கள் உள என்பது போந்ததாம்" என்று உரையாசிரியர் பக்ஷாந்தரங்கூறி, அதற்கு உதாரணமாகப் 'பெருங்கொற்றன், பெருஞ்சாத்தன்' என்பவைகளை உதாரணங்காட்டியுள்ளார். இதைச் சேனாவரையர் 'பெருங்கொற்றன், பெருஞ்சாத்தன் என இல்குணமடுத்து வழக்கின்கண்ணும் இனஞ்சுட்டாது வருதலின் அதனால் விசேடிக்கற்பாலது விசேடியாது நின்றதன்றாகலின் ஈண்டைக்கெய்தா' என்னும் வாக்கியத்தால் மறுத்துள்ளார்,

22-வது சூத்திரம். ஆக்கக் கிளவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.

இங்கு உரையாசிரியர் 'வாளாதோதுஞ் சூத்திரமெல்லாம் வழக்கே நோக்கும்; செய்யுட்காயிற் கிளந்தேயோதும்; அதனால், வழக்கினுள் என வேண்டா; அம்மிகுதியான் ஆக்கமும் காரணமும் இன்றிவருதலும், காரணம் கொடுத்து ஆக்கமின்றி வருதலும் என இரண்டுங் கொள்ளப்

படும்' என்கிறார். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் 'வழக்கினுட் காரணமின்றியும் வருமெனவே, செய்யுளுட் காரணம்பெற்றேவருமென்ப தாம்' என்று கூறுகிறார்கள்.

23-வது சூத்திரம். பான்மயக் குற்ற வையக் கிளவி
தானறி பொருள்வயிற் பன்மை கூறல்.

இச்சூத்திரத்தின்பொருள்:—

உரையாசிரியர்:—(இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் உயர்திணைப் பால் ஐயத்துக்கட் சொல்நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று). திணையறிந்து பாலையந்தோன்றியவதனை அத்திணைப் பன்மைமேல்வைத்துச்சொல்லுக என்றவாறு. உ-ம் ஒருவல் கொல்லோ, ஒருத்திகொல்லோ தோன்றாநின்றார்.

சேனாவரையர்:—திணை துணிந்து பாறுணியாத ஐயப்பொருளை அவ்வத்திணைப் பன்மையாற் கூறுக. உ-ம் ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டிகொல்லோ இஃதோ தோன்றுவார்; ஒன்றோ பலவோ செப்புக்கள. (திணைவயினென்னாது தானறிபொருள்வயினெனப் பொதுப்படக்கூறிய வதனான், ஒருவன்கொல்லோ பலர்கொல்லோ கறவையுய்த்தகள்வர் என்றும், ஒருத்திகொல்லோ பலர்கொல்லோ இக்குருக்கத்திநீழல் வண்டலயர்ந்தார் என்றும் திணையோடு ஆண்மை பெண்மை துணிந்த பன்மையொருமைப் பாலையமுங் கொள்ளப்படும்.)

நச்சினார்க்கினியர்:—திணை துணிந்து பால்துணியாது நின்ற ஐயப் பொருளைத் தானறிந்த உயர்திணைப்பொருளிடத்துப் பன்மையாற் கூறுக. உ-ம் ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டிசொல்லோ தோன்று கின்றவர். (திணைவயினென்னாது ....ஆண்மை பெண்மை துணிந்த பன்மையொருமைப் பாலையமுங் கொள்ளப்படும்.)

உரையாசிரியர்மதப்படி பான்மயக்குற்ற என்பதற்கு ஆண்பால் பெண்பால் மயக்குற்ற என்பது பொருள்; சேனாவரையர்மதப்படி ஆண்பால், பெண்பால், பலர்பால் மயக்குற்ற; ஒன்றன்பால், பலவின் பால் மயக்குற்ற என்பது பொருள்; நச்சினார்க்கினியர்மதப்படி ஆண் பால், பெண்பால், பலர்பால் மயக்குற்ற என்பதே. இங்கு, பான்மயக்

குற்ற என்பதற்கு உயர்திணைப்பால் மயக்குற்ற என்று பொருள்கொண்டதற்கு உரையாசிரியரும், நச்சினார்க்கினியரும் காரணங்கூறவில்லை. பின்வருஞ் சூத்திரத்தில் அஃறிணைப் பிரிப்பினும் என்றிருப்பதால் இங்கு அப்பொருள்கொண்டார்கள்போலும். சேனாவரையர் 'ஒன்றோ பலவோசெய்புக்கன' என்னும் உதாரணம் பின்கூறுஞ் சூத்திரத்துக்குப் பொருந்தாது என்று கருதி, இச்சூத்திரத்திலேயே அமைத்தார்; அது பற்றியே பான்மயக்குற்ற என்பதற்கு ஒன்றன்பால், பலவின்பால் மயக்குற்ற என்றும் பொருள்கொண்டனர்போலும்.

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் ஆண்பால், பெண்பால் ஐயத்தோடு பலர்பால் ஐயத்தையுங் கொள்வதற்காகத் 'திணைவயினென்னுது தானறிபொருள்வயினெனப் பொதுப்படக்கூறினார்' என்று கூறியுள்ளார்கள். சூத்திரத்திலுள்ள 'பான்மயக்குற்ற' என்பதனாலேயே 'ஆண்பால், பெண்பால்,' 'ஆண்பால் பலர்பால்,' 'பெண்பால், பலர்பால்,' என்ற மூவகை ஐயத்தையுங் கொள்ளலாமோவென்று தோன்றுகிறது.

சேனாவரையர் 'கிளவியென்பது ஈண்டுப் பொருளை' என்பதற்கு இச்சூத்திரத்திற் 'கிளவி' என்பதற்குப் பொருளென்றும், ஐயக்கிளவியை அதிகாரத்தாற்பெறும் பின்வருஞ்சூத்திரத்திற் 'கிளவி' என்பதற்குச் சொல் என்றும் பொருளென்று குறிப்பால் உணர்த்தியுள்ளார். இங்குப் 'பன்மைகூறல்' என்பதற்குப் 'பன்மைவிகுதி கூறவேண்டும்' என்று பொருளல்ல; பன்மைச்சொல்லால் வியவகரிக்கவேண்டும் என்பதே பொருள்.

24-வது சூத்திரம். உருபென மொழியினு மஃறிணைப் பிரிப்பினு
மிருவீற்று முரித்தே சுட்டுங் காலை.

இச்சூத்திரத்தின்பொருள்:—

உரையாசிரியர்:—திணையையம் தோன்றியவழி ஒருவடிவுசொல்லக் கருதினும், அஃறிணையை ஒன்று பல என்று பிரித்துச் சொல்லினும் மேலடுத்தபோலப் பொதுவினானே சொல்லுக என்றவாறு.

சேனாவரையர்:—உருபெனச்சொல்லுமிடத்தும், ஒருமையும் பன்மையுமாகப் பிரிக்கப்படும் அஃறிணைப்பொதுச்சொற்கண்ணும், இவ்விருகூற்றினும் ஐயப்புலப்பொதுச்சொல்லாதலுரித்து.

நச்சினார்க்கினியர்:—திணையையத்துக்கண்ணும் அஃறிணைப் பாலையத்துக்கண்ணுங் கூறும் மரபு கருதுமிடத்துத் திணையையத்துக் கண் உருவெனச்சொல்லுமிடத்தும், ஒருமையும் பன்மையுமாகப் பிரிக்கப்படும் அஃறிணையியற்பெயராகிய பொதுச்சொற்கண்ணும் ஐயத்தைப் புலப்படுத்தும் பொதுவாகியதன்மை உரித்து.

மூன்று உரைகாரர்களும் பொருள் ஒன்றையே கூறினும் உரையாசிரியர்கூறியுள்ளது தெளிவாயுளது. மூவரும் 'குற்றிகொல்லோ மகன் கொல்லோ தோன்றுகின்ற உரு, ஒன்றுகொல்லோ பலகொல்லோ செய்புக்க பெற்றம்' என்று உதாரணங்கூறியுள்ளார்கள். முதல் உதாரணத்தில் 'உரு' என்பது அஃறிணையைக்குறிக்கும்போது மகன் கொல்லோ என்பதில் உயர்திணைச்சொல்லாகிய மகன் என்பதை உபயோகிப்பது வழுவென்று ஆசங்கைதோன்ற, அது வழுவல்ல வென்றும், இரண்டாம் உதாரணத்திற் பெற்றம் என்ற ஒரேசொல்லை ஒன்றே என்பதனோடு அந்நுவயிக்கும்போது ஒருமையாகவும், பலவோ என்பதனோடு அந்நுவயிக்கும்போது பன்மையாகவுங்கொள்வது வழு வல்லவென்றும் இச்சூத்திரத்தால் அறியப்படுகிறது. இக்கருத்தை நச்சினார்க்கினியர் 'உருவென்பது உடலுயிர்க்கூட்டப் பொதுமையாகிய மக்களென்னும்பொதுமைக்கு ஏலாது உடலையே உணர்த்துதலானும், பெற்றமென்பது இயற்பெயராயினும் ஒருகாற் சொல்லுதற்கண் ஒருபால் மேல் நில்லாது இருபால்மேல் நிற்றலானும் வழுவமைதியாயிற்று' என்பதனாற் கூறியுள்ளார்.

சேனாவரையர் 'உருபினுமென்றது உருபெனமொழியினு மென்றதனன், உருபின்பொருளவாகிய வடிவு, பிழம்பு, பிண்டமென்னுந் தொடக்கத்தனவுங் கொள்க' என்கிறார். 'உருபினும்' என்றால் உருபு என்னுஞ்சொல் என்று பொருள்படுமா? எனின், சொல் என்பதையே குறிக்கவேண்டித்தான் சூத்திரத்தில் 'எனமொழியினும்' எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார் என்று தோன்றுகிறது. தன்னினமுடித்தலால் வடிவுமுதலியசொற்களுங் கொள்ளலாம் என்று சேனாவரையர் கூறியிருப்பின், பொருந்தும்.

25-வது சூத்திரம்.
தன்மை சுட்டலு முரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான.

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர் :—அன்மைத்தன்மையைச்சொல்லுதலும் உரித்து ஐயத்திற்குவேறாய்த் துணிபொருளிடத்து என்றவாறு. ஒருத்தி யெனத்துணிந்தவழி 'ஒருவனல்லள் ஒருத்தி' என வரும். ஒருவன் எனத் துணிந்தவழி, 'ஒருத்தியல்லன், ஒருவன்' என வரும்.

சேனாவரையர் :—ஐயுற்றுத்துணியும்வழி அன்மைக்கிளவி அன்மைத்தன்மையைச் சுட்டிநிற்றலுமுரித்தென்று சொல்லுவர், துணிந்துதழீஇக்கொள்ளப்பட்டபொருளின்வேறாய பொருளிடத்து என்றவாறு. என்றது, குற்றிகொல்லோ மகன்கொல்லோ என்றானும், ஒருவன்கொல்லோ ஒருத்திகொல்லோ என்றானும், ஒன்றுகொல்லோ பலகொல்லோ என்றானும் ஐயநிகழ்ந்தவழித் துணிதலுமுண்டு; பிற நடையுட்டுணிந்தவழி மறுக்கப்படும்பொருண்மேல் அன்மைத்தன்மை யேற்றினு மமையு மென்றவாறு.

நச்சினார்க்கினியர்:—ஒருவர்க்குப் பாலையுந் திணையையும் நிகழ்ந்துழி அங்ஙனம் ஐயுறலையன்றி அவர்க்கு அப்பொருள்களின் உண்மைத்தன்மையைக் கருதுதலும் உரித்து: ஆண்டு ஒருபொருள் ஒருபொருளல்லவாந்தன்மை உணர்த்துஞ்சொல் ஐயத்துக்குவேறாய்த் துணிந்துதழீஇக்கொண்டபொருளின்கண்ணவென்றுகூறுவர் ஆசிரியர்.

உரையாசிரியர்மதப்படி சூத்திரத்துக்கு அந்நுவயம்:—வேறிடத் தான, அன்மைக்கிளவி தன்மைசுட்டலு முரித்தென மொழிப என்பது; இங்கு, தன்மை என்பதற்கு அன்மைத்தன்மை என்பதும், வேறிடத் தான என்பதற்கு ஐயத்திற்குவேறான துணிபொருளினிடத்து என்பதும் பொருள். இவ்வாறுசொல்லின் 'கிளவி' என்னுஞ்சொல் நன்குபொருந்தவில்லை. அன்மைக்கிளவி என்பதைத் தன்மைக்கு அடைமொழியாய்வைத்துச்சொல்லுவதும் சூத்திரப்போக்குக்குத் தக்கதாயில்லை. பக்ஷாந்தரத்தில் 'வேறிடம் என்பதற்குத் துணியப்படும் பொருட்கு வேறாகிநிற்கும் பொருள்' என்கிறார். இவ்வாறு சொல்லின்

மகன் என்று துணியின் 'குற்றியன்று' என்று உதாரணஞ்சொன்னாற் போதும்; 'குற்றியன்று, மகன்' என்று உதாரணங்கூறுவது அவசிய மில்லையென்று தோன்றுகிறது.

சேனாவரையர் உரையாசிரியர்மதப்படியே சூத்திரத்துக்கு அந்நு வயங்கருதி அவர் பக்ஷாந்தரமாகக்கூறியபொருளையே கூறியுள்ளார். அப்படிக்கூறின முன்னர்ச் சொன்ன குற்றம் இங்கும் நிற்கும்.

நச்சினார்க்கினியர்மதப்படி சூத்திரத்துக்கு அந்நுவயம்:—'தன்மை சுட்டலுமுரித்து: அன்மைக்கிளவி வேறிடத்தான என மொழிப' என்பதே. 'தன்மை' என்பதற்குத் துணிந்தபொருளின்தன்மை என்பதும், 'வேறிடத்தான' என்பதற்கு ஐயப்பொருளுக்குவேறுபட்ட பொருட்கிளவியிடத்து என்பதும் பொருள். அஃதாவது, அன்மையைக் குறிக்குஞ்சொல்லின்விகுதி ஐயப்பொருளுக்குவேறானதும் துணிபொரு ளுக்குத்தக்கதும் ஆம் என்பதே. உரையாசிரியர் சேனாவரையர் இரு வருஞ் சொன்னபொருளைவிட இப்பொருளே மிகமேலானது. ஏனெனில் இங்குத்தான் அன்மைக்கிளவியின்விகுதியைப்பற்றிக் கூறியுள்ளது. மேலும், 'தன்மை' 'கிளவி' இவ்விருசொற்களின்பொருள் பொருத்தமா யுள. ஆனால், நச்சினார்க்கினியர் பொருள்கூறியிருக்கும்விதத்தில் அப் பொருளின்கண் உண்மைத்தன்மையைக் கருதலும் உரித்து என்றும், அன்மைக்கிளவி வேறிடத்தான என்றும் இரண்டு விதேயம் ஏற்படுவதால் வாக்கியபேதம் என்ற குற்றம் வரும் என்ற ஆசங்கை தோன்றலாம். பொருளின உண்மைத்தன்மையைச்சுட்டல் உலகத்தாருக்கு இயற்கை யாதலால், அதை விதிக்கவேண்டுவது அவசியமில்லை. ஆதலால் இயற்கையைத் 'தன்மைசுட்டலுமுரித்து' என்பதால் அநுவதித்து, அன்மைக்கிளவியை வேறிடத்து விதித்தற்பொருட்டுப் பின்னரும் எடுத்தோதினார் என்பது சமாதானமாகும்.

இச்சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் 'இனிச் சேனாவரையர் முன்னிற்சூத்திரத்தில் உருவென்பதனை........முடியாமையும் உணர்க' என்று சேனாவரையரை மறப்பது மிகப் பொருத்தமாயுளது.

இச்சூத்திரங்கூறினது எற்றுக்கு எனின் முதலில் ஐயந்தோன்றிப் பிறகு துணிவுவந்தவுடன் அன்மைக்கிளவியை உபயோகிப்பது எவ்வாறு

என்பதையும், ஐயத்தோடு ஒருவன் வினவ ஐயந்தீர்ந்தவன் அவனுக்கு விடை எவ்வாறு அளிக்கவேண்டுமென்பதையும் உணர்த்துவதற்கே. அவ்வாறெனில் விடை எவ்வாறிருக்கவேண்டுமென்பது ஆராய்தல் வேண்டும். ஓர் உருவைப் பார்த்து முதலில் திணையையந்தோன்றிப் பிறகு குற்றி என்று துணிவு ஏற்படின் 'இந்தஉரு மகனன்று, குற்றி' என்னும் பிரயோகம் முதற் சொன்னதற்கும் 'இவன் பெண்டாட்டி யல்லன், ஆண்மகன்,' 'இவள் ஆண்மகனல்லள், பெண்டாட்டி,' 'இவன் குற்றியல்லன், மகன்' என்னும் பிரயோகங்கள் பின்னர்ச்சொன்ன தற்கும் வரலாம். அவ்வாறன்றிப் பின்னர்ச்சொன்னவற்றையும் முதற் கூறினதற்கே உதாரணமாகக்கூறின், இவன் இவள் என்பதாலே யே ஆண் பெண் உணர்த்தப்படுதலால் ஐயந்தோன்றாது. இவன் இவள் என்பதற்குப் பிரதியாக 'ஆள்' என்றால் முதற்கூறினதற்கும் இவை உதாரணமாகும். உரையாசிரியர் கூறியுள்ள 'ஒருவனல்லள், ஒருத்தி' முதலியவற்றில் 'இவ்வாள்' என்பது தொக்குள்ளது எனல்வேண்டும்; அவ்வாறில்லாவிடின் அவ்வாக்கியங்கள் 'ஒருத்தி' முதலாயின எழுவா யாகவும் 'ஒருவனல்லன்' முதலியன பயனிலையாகவுங் கொள்ளவேண்டும். அப்போது அவ்வாறுள்ள வாக்கியங்கள் நற்பொருளுள்ளனவாயில்லை.

சேனாவரையர், சூத்திரத்திற் 'சுட்டலும்' என்னுமிடத்து உம்மை யை எதிர்மறையாகக்கொண்டு, நச்சினார்க்கினியர் கூறியுள்ள 'இவ்வுருவு குற்றியன்று, மகன்' முதலிய உதாரணங்களைக் கூறியுள்ளார். ஆனால் இவர் முதலிற்கூறியுள்ள உதாரணங்கள் பொருந்தவில்லையென்று நச்சினார்க்கினியர்மறுத்தது பொருத்தமாயுளது என்று கூறினும். ஆகையால் இச்சூத்திரத்துக்கு உதாரணம் ஒரேவகையாய்த்தான் சொல்வது பொருந்தும். அங்ஙனமாயின் சூத்திரத்திலுள்ள உம்மைக் குப் பயன் யாதுந் தோன்றவில்லை.

26-வது சூத்திரம். அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.

உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் மூவரும் இச் சூத்திரத்துக்குப் பொருள் ஒரேவிதமாகக் கொண்டுள்ளார்கள். ஆனால் வண்ணச்சினைச்சொல் என்பதற்கு வண்ணச்சொல்லோடு தொடர்ந்த

சினைச்சொல்லையுடைய முதற்சொல் என்று சேனாவரையர் பொருள் கூறியுள்ளார்; நச்சினார்க்கினியர் அப்பொருளே கொள்வதோடு அவ்வாறு கூறப்பட்ட சொற்களுக்கு வண்ணச்சினைச்சொல் என்று பெயர் என்றும் கூறுகிறார். அவ்வாறுகூறுவது சூத்திரப்போக்குக்குத் தகுதி யானது என்றே தோன்றுகின்றது.

நடைபெற்றியலும் என்பதில் நடை என்பதற்கு வழக்கு என்று பொருள்கொண்டு மேற்சொன்ன நியமம் வழக்கிற்கே; ஆதலாற் செய்யுளுள் மாறிவரலாம் என்று மூவருங் கூறுகிறார்கள். அவ்வாறு செய்யுளுள் மாறிவருவதற்கு, 'பெருந்தோட் சிறுமருங்குற் பேரமர்க்கட் பேதை' என்பதை உதாரணமாக உரையாசிரியர் கொண்டார். அவ்வுதாரணம் பொருத்தமன்று என்றுகூறிச் சேனாவரையர், 'கவிசெந் தாழிக் குவி புறத் திருந்த-செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா—வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடி' (புறநா 238) என்பதை உதாரணமாகக் கூறியுள்ளார். இவ்வுதாரணம் முற்சொன்ன உதாரணத்தைவிடத் தெளிவாயிருப்பது என்பதில் ஐயமில்லை. நச்சினார்க்கினியர் இரண்டையும் உதாரணமாகக் கூறினார்.

உரையாசிரியர் 'முதலொடு குணமிரண் டடுக்குதல் வழக்கியல்—சினையொ டடுக்கல் செய்யு ளாறே' என்ற பிறமதத்தைப் பக்ஷாந்தரமாகக் கூறினதைச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் ஒருவாறு ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

இச்சூத்திரத்தில் அடை, சினை, முதல் என்றதனாற் சினைக்குள்ள அடையைக்கொண்ட சொற்கள் இச்சூத்திரத்துக்கு விஷயமல்ல. அடையையும், சினையையுங்கொண்ட முதல் எங்குள்ளனவோ, அவைதான் இச்சூத்திரத்துக்கு விஷயம்; ஆதலாற் செங்கானாரை என்றசொல் தவறல்ல என்றுமட்டும் இச்சூத்திரத்தாற் கூறப்பட்டதேயொழியச் செங்காரைக்கால் முதலிய சொற்கள் தவறு என்றுவது, தவறல்ல என்றுவது இச்சூத்திரத்தாற் கூறப்படவில்லை.

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்கள் சேனாவரையப்பதிப்பிலும், நச்சினார்க்கினியப்பதிப்பிலும் 'கவிசெந்தாழைக்............' என்ற பாடம் உளது. அது கவிசெந்தாழி என்றிருக்கவேண்டும்.

27-வது சூத்திரம்.

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.

இச்சூத்திரத்துக்குப் பொருள் உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் மூவரும் ஒரேவிதமாகக் கூறியுள்ளார்கள். இச் சூத்திரத்தில் 'வழக்கினாகிய வுயர்சொற்கிளவி' என்பதாலேயே அச் சொற்கள் வழக்கில் வழுவல்லவென்பதும் செய்யுளுள் வழுவென்றும் புலப்படுதலால் 'இலக்கணமருங்கிற் சொல்லாறல்ல' என்பது மிகை என்று கருதி உரையாசிரியர் அம்மிகையால் 'உயர்திணையை அஃறிணை போலச்சொல்லுதலும், அஃறிணையை உயர்திணைபோலச்சொல்லுதலுங் கொள்க' என்றார். சேனாவரையர் 'வழக்கினாகிய வுயர்சொற்கிளவி' என் பதனால் அச்சொற்கள் வழுவல்ல என்று நிச்சயமாய் உணர்த்தப்படும். செய்யுளுள் வழுவா? வழுவில்லையா? என்ற ஐயம் 'இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல' என்பதனால் திண்ணமாய் விளக்கப்படுமென்று கூறி, உயர்திணையை அஃறிணைபோலச்சொல்லுதல்முதலியவற்றைத் தன்னின முடித்தலாற்கொள்ளுகிறார். நச்சினார்க்கினியர் உரையாசிரியர்மதத்தையே கைப்பற்றினர்.

சேனாவரையத்திற் பன்மைக்கிளவியுமெனப் பொதுவகையாற் கூறினாரேனும், உயர்த்தற்கண்வழங்கப்பட்டுவரும் உயர்திணைப்பன்மை யும் விரவுப்பன்மையுமே கொள்ளப்படுமென்றற்கு வழக்கினாகியவென்றார் என்று கூறியுள்ளது. 'வழக்கினாகிய' என்று சொல்லுக்குக் கூறும் இப்பயன் நன்குபுலப்பட வில்லை.

28-வது சூத்திரம்.

செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்
நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்து முரிய வென்ப.

அவற்றுள்,

29, 30-வது சூத்திரங்கள்.

தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை யாயீ ரிடத்த.
ஏனை யிரண்டு மேனை யிடத்த.

இச்சூத்திரங்களிற் செலவு, வரவு, தரவு, கோடை இவை நான்கும் கோடைப்பொருளன என்று உரையாசிரியர் கொண்டார். சேனவரையரும் நச்சினார்க்கினியரும் செலவு, வரவு என்பவற்றை முறையே செல்லுதற்பொருளிலும், வருதற்பொருளிலும், தரவு கோடை இவையிரண்டனையும் கோடைப்பொருளிலும் கொண்டார்கள். இவர்கள் சொல்லுவதே பொருத்தமென்றுதோன்றுகிறது.

29, 30-வது சூத்திரங்களைச் சிறிது மாற்றிச்சொல்லிவிட்டால் 28-வதுசூத்திரம் வேண்டாமென்று ஆசங்கித்து, மூவரும் 29, 30-வது சூத்திரப்பொருளுக்குமாறுகவரும் வழக்களையமைப்பதற்காக 28-வது சூத்திரம் வேண்டுமென்றார்கள். ஆதலால், தருசொல் வருசொல் இரண்டும் பெரும்பான்மை தன்மை முன்னிலையிடங்களில் வருமென்றும், ஏனையிரண்டும் பெரும்பான்மை படர்க்கையிடத்தில் வருமென்றும் உணர்த்தியவாறாயிற்று.

31-வது	யாதெவ னென்னு மாயிரு கிளவியு
சூத்திரம்.	மறியாப் பொருள்வயிற் செறியத் தோன்றும்

இச்சூத்திரத்துக்கு உரையாசிரியர், சேனவரையர், நச்சினார்க்கினியர் மூவரும் ஒரேவிதமாகப் பொருள்கொண்டார்கள். சூத்திரத்தில் 'செறிய' என்னுஞ் சொல் எற்றுக்கு எனின், திணை, பால் இடம் முதலியவைகளைச் சிறப்புவகையா னுணர்த்தும் யா, யாவை, யாவன், யாவள் முதலியவற்றை விலக்குவதற்கு என்று உரைகாரர்கள்மூவருங் கூறியுள்ளார்கள்.

இச்சூத்திரத்துக்கு உதாரணமாகச் சேனவரையர், நச்சினார்க்கினியர் இருவரும் 'இச்சொற்குப் பொருள்யாது?' என்பதை உணர்த்தியுள்ளார். இங்குப் பொருள் என்பதற்கு அருத்தம் என்று பொருள் கொண்டு, அஃது அஃறிணைதானே, யாது என்பதும் அஃறிணைதானே,

இங்கு வழூவமைதி எவ்வாறு? என்று ஆசங்கிப்போருக்குப் பொருள் என்பதற்கு விஷயம் என்று பொருள்கொண்டால் ஆசங்கை தீர்ந்துவிடலாம்.

பாடபேதம்:—சைவசித்தாந்தக்கழகப்பதிப்பில் 'அவ்வாறுதல்' என்பதற்கு முன் 'ஆகலின்' என்றுளது. அஃது அவசியமாகத் தோன்றவில்லை. தாமோதரம்பிள்ளையவர்கள்பதிப்பிற்போல் அஃது இல்லாமலிருப்பின் நலம்.

32-வது சூத்திரம்.

அவற்றுள், யாதென வரூஉம் வினாவின் கிளவி
யறிந்த பொருள்வயி னையந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி யாதலு முரித்தே.

இச்சூத்திரத்துக்கும் உரைகாரர்கள்மூவரும் ஒரேவிதமாகப் பொருள்கொண்டார்கள். உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் செறியத்தோன்றாத யாவன், யாவர் முதலியவற்றையும் இச்சூத்திரத்துள் அடக்குவதற்கு இச்சூத்திரத்திற்கூறும் யாது என்னுஞ்சொல்லை முற்சூத்திரத்திற் பின்வையாது முன்வைத்ததே காரணமென்று கூறியுள்ளார்கள்.

இளம்பூரணத்தில் "'முன்னர்ச்சூத்திரம்' 'எவன் யாது' என்று கூறற்பாலன், எற்றுக்கு 'யாது எவன்' எனக்கூறினான் என்னின்? 'யாது' என்பதனைப் பின்னரும் இங்குக்கொணர்ந்து ஆராய்தலின் என்க. அவ்வாறு கூறாது குறிப்புக்கொண்டதனான், 'நமருள் யாவர் போயினார்,' 'அவற்றுள் எவ்வெருது கெட்டது' என்பன கொள்க" என்று வாக்கியங்கள் உள்ளன. அவற்றின்பொருளை முன்னிற் சூத்திரத்துள் யாதென்பதனை இச்சூத்திரத்தோடு பொருந்தப் பின் வையாததனாற் செறியத்தோன்றாதனவற்றினும் வருவன கொள்க' என்னும் வாக்கியத்தால் நச்சினார்க்கினியர் தெளிவாகக் கூறியுள்ளார்.

இப்பொருள் அவ்விளம்பூரணவாக்கியங்களுக்கு எவ்வாறுகிடைக்கு மெனின், அவ்வாக்கியங்களை "'யாது என்பதனைப் பின்னரும் இங்குக் கொணர்ந்து ஆராய்தலின், முன்னர்ச் சூத்திரம் 'எவன் யாது' என்று கூறற்பாலன், எற்றுக்கு 'யாது எவன்' எனக்கூறினுன் என்னின் என்க; என்பதைப் பூர்வபக்ஷவாக்கியமாகவும் 'அவ்வாறு கூறுது.....கொள்க' என்பதைச் சித்தாந்தவாக்கியமாகவும் அந்நுவயித்தால் அது நன்கு விளங்கும். அவ்வாறு எழுதுவது உரையாசிரியர்காலத்து நடை போலும்.

சேனுவரையர் 'யாவன்,' 'யாவர்' முதலிய சொற்களில் திணை, பால் முதலியன சிறிது அறியப்பட்டமையால் அறிந்தபொருள்வயின் ஐயந்தீர்த்தற்கே வருமன்றி 'யாது' என்பதைப்போல் அறியாப் பொருளிலும் வாராததால் இச்சூத்திரத்தில் அச்சொற்களை யமைக்க வேண்டாமென்பதை 'அவை அறிந்தபொருள்வயி னையந்தீர்தற்கல்லது யாண்டும் வாராமையின், ஈண்டமைக்கப்படாவென்பது' என்னும் வாக்கியத்தாற் கூறியுள்ளார்.

சேனுவரையர் 'இதனுன் வழுவமைத்தார்' என்ருர். நச்சினுர்க் கினியர் 'இஃது அறிந்தபொருட்கண் ஐயந்தீர்தலின் வழுவமைதியன்று என்ருர். இச்சூத்திரஞ் சிறப்புச்சூத்திரமாகையால் நச்சினுர்க்கினியர் சொல்வதே பொருத்தம் என்று தோன்றுகிறது.

(தொடரும்.)

ஸ்ரீ:

மதிப்புரை.

ஆரோக்கியதீபிகை:—கடந்த நாலைந்துவருடங்களாக நம்நாட்டில் நன்குமதிப்போடு நடைபெற்றுவரும் இச்சிறந்த மாதாந்தப்பத்திரிகை, சரீராரோக்யோத்தைக்குறித்து ஆணும்பெண்ணுமாகிய அனைவரும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய உண்மைகள்பலவற்றையும் லோகோபகாரமாக வெளியிட்டுவருதல் யாவரும் அறிந்ததே. வைத்தியசாஸ்திரத்தில் நிபுணர்களாய் நமது நாட்டிலும் மேல்நாட்டிலுமுள்ள அறிஞர்கள் அநேகருடைய ஆராய்ச்சிமுடிபுகள் இதில் அடங்கியுள்ளன. இப்பொது நன்மையான காரியம் இதன் ஆசிரியர் டாக்டர். யூ. ராமாராவ் அவர்களுக்குப் பெருமையளிக்கத்தக்கது. இப்பத்திரிகையின் வருடச்சந்தா ரூ. 1-8-0; வெளிநாடுகளுக்கு ரூ 2. வேண்டுவோர் ஆரோக்கியதீபிகை பத்திரிகாலயம், 323, தம்புசெட்டிதெரு, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

சிவநேசன்:—இப்பெயர்புனைந்த வாரப்பத்திரிகையொன்று பிரபவ ஞூ ஆவணிமீ முதலாக வெளிவந்துகொண்டிருக்கிறது. இது பலவான்குடியினின்று சிவநேசர் திருக்கூட்ட ஆதாவுபெற்று, திங்கட்கிழமைதோறும் பிரசுரிக்கப்படுவது. இக்காலம் நம்நாட்டிற் சிறிது நிலைதளர்ந்து நிற்கும் வைதிகசைவமும், செந்தமிழ்மொழியும் தழைத்தோங்குமாறு செய்வதே இதன் நன்னோக்கமென்று விளங்குகிறது. பிறமதநிந்தையின்றிச் சைவசமயத்தின்பெருமையை நிலைநிறுத்துதல் இதன் முக்கியகடமையாக அமைபற்பாலது. இத்தகைய பத்திரிகைகளை நமது நாட்டினர் பெரிதும் விழைவுடன் ஆதரிப்பார்களென்பதில் ஐயமில்லை. இதன் ஆசிரியர் ஸ்ரீமாந். ராம. சு. ராம இராமசாமிசெட்டியாரவர்கள். இந்நற்கருமத்தை இடையூறின்றிக் கடைக்கூட்டுமாறு இறைவன் திருவருள்புரிக. இதன் வருடச்சந்தா ரூபா 3; தனிப்பிரதி அணா ஒன்று. வேண்டுவோர் பலவான்குடி, சிவநேசன் காரியாலயம் அமைச்சரவர்களுக்கு எழுதிக்கொள்க.

சித்தாந்தம்:—இஃதொரு புதிய மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. சென்னைப் பச்சையப்பன்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீமாந். மணி. திருநாவுக்கரசு

முதலியாரவர்கள் இதன் பத்திராதிபராக விளங்குகின்றார். சைவசித்தாந்தவிஷயமாக அறியத்தக்க பொருள்களெல்லாம் இதில் நுட்பமாகவும் தெளிவாகவும் தக்க அறிஞர்களைக்கொண்டு ஆராய்ந்தெழுதப்படுமென்று தெரிகிறது. மத்வுணர்ச்சி குன்றிவரு மிக்காலத்தில் இது போன்ற பத்திரிகைகள் பெரிதும் பயன்படுவனவேயாம். அகலமான வடிவில் அழுத்தமான கடிதத்துடன் மூன்றுபாரங்களளவுள்ள பகுதிகளையுடைய இப்பத்திரிகையின் வருடச்சந்தா ரூ. 1–8–0 என விதிக்கப்பட்டிருப்பது மிகவும் குறைவுடையதென்றே சொல்லாம். வெளிநாடுகளுக்கு ரூ. 2. வேண்டுவோர், 'சைவசித்தாந்த மகா சமாஜக்காரியாலயம், 92. வரதாமுத்தியப்பன்தெரு, சென்னை' என்ற விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

சரஸ்வதி:—இப்பெயர்கொண்ட மாதாந்தப்பத்திரிகை, கொழும்பு, 63, ஜிந்தும்பிட்டி தெரு, சரஸ்வதிபுத்தகசாலையினின்று பிரசுரிக்கப்படுவது. படிப்பவர்க்கு மனமகிழ்ச்சியளிக்கும் பலவகைக் கட்டுரைகள் இதன்பால் நிரம்பியுள்ளன. இது இனிமைவாய்ந்த எளிய தமிழ்நடையுடையதாய்க் காணப்படுகிறது. வருடச்சந்தா ரூ. 2. வேண்டுவோர் மேலேகண்ட இதன் பிரசுராலயத்திற்கு எழுதிப் பெறுக.

அன்பு:—இதுவும் ஓர் மாதாந்தப்பத்திரிகையேயாகும். ஸ்ரீமத் ஆ.மு சாமிநாதப்புலவரவர்களை ஆசிரியராகப்பெற்று இது இரங்கோனிலிருந்து வெளிவருகின்றது. அறிவு வளர்ச்சிக்கான தமிழ்க்கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. இதன் தனிமலர் அணா 8; விலாசம்— "அன்பு 31, 32 பார்வீதி, இரங்கோன்."

ஜெயசக்தி:—இது திருவநந்தபுரம் ஸ்ரீமான் டி. கே ராமபத்ர சர்மா அவர்களை ஆசிரியராகப்பெற்று, மாதமொருமுறை வெளிவருவது; நவீனமுறையில் எழுதப்படும் நகைச்சுவைபொருந்திய கட்டுரைகளையுடையதாய்ப் பெண்டிர் பேதையர் யாவருக்கும் இன்பம்பயக்கும் இயல்பினது. வருடச்சந்தா அணா 12; இதன் சந்தாநேயர்களுக்கு அவரவர் தகுதியைப் பரிசோதித்துப் பரிசுகள் வழங்குவதாக வாக்களிக்கப்படுகிறது. இதிற் சேரவிரும்புவோர் 'ஜெயசக்தி ஆபீஸ், புத்தன்சந்தை, திருவநந்தபுரம்' என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்ளலாம்.

அறிவுவிளக்கம்:—இதுவும் ஒரு மாதாந்தப் பத்திரிகையே. ஆசிரியர் உடுமலைப்பேட்டை ஸ்ரீமாந் அ. கிருஷ்ணசாமிப்பிள்ளையவர்கள். எளியநடையில் எழுதப்பட்ட கட்டுரைகள் பல இதன்கண்ணும் வெளியாகின்றன. இதன் வருடச்சந்தா அணா ஆறேயாகும். இதனினும் குறைந்த சந்தாவிற் கிடைக்கும் பத்திரிகை வேறெதுவுமேயில்லை. ஆகையால் மாணவர்களாலும் பிறராலும் மிகவும் ஆதரிக்கத்தக்கதே. வேண்டுவோர் பத்திராதிபரவர்களுக்கு எழுதிப் பெறுவார்களாக.

ஒரு நாட்டுப்புரத் தேவாலயமுற்றத்தில் எழுதப்பட்ட

இரங்கற்பா

("Elgy Written in a Country Church Yard").

கிறே (**Grey**) என்னும் ஆங்கிலப்புலவரால் இயற்றப்பட்டது.

[௨௫-ம் தொகுதியின் ௩௩௮-ம் பக்கத்தொடர்ச்சி.]

25 இன்னுமிங்கிவரெலும்புக்குறுமிடையூறுகாக்கு
நன்மையைநாடிநன்றுமழகிலாவெழுத்தினோடுந்
துன்னுநன்மாண்பிலாதசித்திரத்தொழிலினோடு
மன்னுபவெழில்பெறுவாய்மருவுஞாபகச்சின்னங்கள்.

26 இங்கிவைவழிச்செல்வோரையினிமையானோக்கிமேவுந்
துங்கமாருயிர்ப்புத்தோன்றக்குறைபிரக்கின்றமேன்மை
தங்குசீரிரங்கற்பாவுந்தகைமையுமெழுதற்கேற்ற
பொங்குசீரிடத்திலின்னோர்நாமமுமாயுடானும்.

27 கல்வியான்மடமைநீங்காக்கடையராம்புலவராலே
வல்லெனவரையப்பட்டேமருவவிந்தமாங்கர்ப்
புல்லியமரணவேளைதன்னிலிப்புலவரோதுந்
தொல்லியற்றூயவாக்கேதுணையெனமருவுமன்றே.

28 எவரிவ்வுலகவின்பவாசையைமறந்தாராகிச்
சாவினையுவந்தேயேற்குந்தகைமைபெற்றுடையநீரார்
எவரிவ்வின்பவாழ்வினசைதவிர்ந்திறுதியாக
மேவுறநெடியபார்வைவிடுத்துயிர்நீங்குநீரார்.

29 உடம்பினைநீத்தேயேகுமுயிர்சிலவன்பருள்ளத்
திடம்பெறுமியல்பிற்றாகுமன்றியுமின்னோர்தங்கள்
திடம்பெறுமறிவின்றேசுநீங்கவேமூடுங்கண்க
டம்படுமன்புசான்றகண்ணீரையவாவுமன்றே.

30 அன்றியுமின்னோர்மேவுங்கல்லறையதன்பாலுற்றே
துன்றியவியற்கையோசைசோகத்தைக்காட்டல்போன்ற
தன்றியுமின்னோர்க்குற்றசாம்பரினூடேயன்னோர்க்
கென்றுநல்வழக்காறானவெண்ணங்களிருப்பவன்றே.

[தொடரும்.]

ந. பத்மாசநி.

1928ம்ஸ்ரீ பிப்ரவரிமீ 6உ (பிரபவஸ்ரீ தைமீ 24உ)
காலை 9-15 மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்
காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற
தீர்மானங்களின் விவரம்.

1. மகா-ா-ா-ஸ்ரீ K. ராமையங்காரவர்கள் B.A., B.L.,

அக்கிராசனம்வகித்தவர்.

2. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.,
3. ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியாரவர்கள் B.A., B.L.,
4. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L , M L.C.,

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1927-ம்-ஸ்ரீ ஆகஸ்டுமீ முதல் 1928-ம்-ஸ்ரீ ஜனவரிமீ முடிய உள்ள சங்கம் வரவுசெலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய அடியிற் குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-ா-ா-ஸ்ரீ N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் M.A., Professor in Physics, அமெரிக்கன்காலேஜ், மதுரை.

(2) ,, சி. கணேசையர் அவர்கள், ஆசிரியர், புன்னாலைக் கட்டுவன், யாழ்ப்பாணம்,

(3) ,, ஜ. வேங்கடசாமிநாயக்கர் அவர்கள், ஜல்லிபட்டி, உடுமலைப்பேட்டைத் தாலூகா.

(4) ,, M. நடேசமுதலியார் அவர்கள், Lecturer in Tamil, ஸெண்ட்ஜோசப்காலேஜ், திருச்சிராப்பள்ளி.

III. 1927—28-ம் வருஷத்திய சங்கம் வரவு செலவு மதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

மதுரை
6-2-1928.

K. ராமையங்கார்,
அக்கிராசனம்வகித்தவர்.

ஸ்ரீ:

குருபரம்பரை.

ஆளவந்தார்வைபவம்.

[அ0-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இப்படியேநாதமுனியின்பவீடடைந்ததற்பின்
செப்பருஞ்சீருயக்கொண்டார்திருக்குருகைகாவலவ
னப்பன்முதற்பாகவதரந்தாமமடைந்த...............
வொப்பரியதிருவருளாற்செய்ததிறமுரைக்கின்றேன். (கஉ0)

வேறு

பாசங்கடிந்தநாதமுனியுடலைப்பள்ளிப்படுத்ததலத்
தாசில்லாதகுருகைகாவலவனப்பனன்போடுந்
தேசுபொலிந்தயோகத்திலிருந்தானன்றத்திறத்தினையின்
றீசனருளாற்றீவினையேனறிந்தவாற்றாலிசைக்கின்றேன். (கஉக)

[துருகைகர்வலப்பன் யோகத்தமர்ந்தது.]

விடத்தினிற்கொடியவஞ்சமேதினிமேவிவாழு
முடற்பகைச்செடிகள்சென்றுங்குலைந்திடாத்திடத்தைப்பேணித்
துடக்கறுத்தறிவுநல்குஞ்சுருதிசொல்குசைகீழிட்டுத்
திடத்திடங்கொடுக்குமான்றோல்சீர்பெறவதன்மேலிட்டே. (கஉஉ)

ஆங்கதன்மேலாடைவிரித்ததன்மேற்பற்பவாசனத்திற்
பாங்கிலிருந்திருவிழியான்மூக்கினுதியினைப்பார்த்தங்
கோங்கிவளரைம்புலனையொருக்கியிடத்திருக்கரத்தாற்
றாங்கிவலத்திருக்கரத்தைச்சாற்றுமிடையிங்கலையை. (கஉங)

தீரவடக்கிச்சுழுமுனையைத்திறந்துமூலக்கனலெழுப்பி
நேரேயிருந்தங்குண்ணாக்கைக்கினைவாற்றரித்தந்தரத்தாக்கி
வீரஞ்செய்யுமுப்பகையைவிரிந்தமனத்தோடறவெரித்திட்
டேருமிந்துமண்டலத்திலுறுஞ்சிரமுதகலசத்தை. (கஉச)

உருக்கிக்கின்றவுண்ணாக்கினூடேற்றிதயகமலத்தைப்
பெருக்கியதனுண்மலர்நீங்கப்பிறந்தவுணர்வைமேலாக்கி

நெருக்கியெழுமப்பேருணர்வைநிலததலாசசியொககலையி
லிருக்கின்முடிவில்வீற்றிருக்குமிறைவன்றன்பாலுறவிருத்தி. (௧௨௫)

இருந்தான்குருகைகாவலவனப்பனருளோடிருவினையும்
பொருந்தாவுய்யக்கொண்டாரும்புகலுமற்றமுதலிகளும்
மருந்தாம்பிறவிப்பிணிக்கென்னமாறன்மொழிந்தமறைத்தமிழாற்
றிருந்தாதவரையுறத்திருத்தித்தெரிசனார்த்தம்பெறவிளக்கி. (௧௨௬)

[உய்யக்கொண்டார் தெரிசனப்பிரவர்த்தகராய் எழுந்தருளியிருந்தது]

வைகுநாளில்நாதமுனிமலர்த்தாளிணைக்கீழ்வீற்றிருக்கு
முய்யக்கொண்டார்திருவடியிலோங்குமணக்கால்நம்பியருள்
செய்கொள்கமலத்திருவல்லிக்கேணிச்சிறந்தபாண்பெருமாள்
மெய்கொளரையருடன்கூடிவிளங்குமருட்செண்டலங்காரர். (௧௨௭)

புலவர்புகழும்புண்டரிகதாசர்புவனந்தொழுதேத்து
முலகுபெருமாணங்கையிவரோங்குமைவர்பூங்கமலை
யலகிலருள்பெற்றுடையவர்களாசரித்தாராங்கவரில்
மலமிலறிவின்மயமானமணக்கால்நம்பிமாசற்ற. (௧௨௮)

உய்யக்கொண்டார்திருவடிகட்குவந்துசிறந்தகயிங்கரியஞ்
செய்யப்புக்காராண்டிரண்டும்பத்துஞ்செய்துசென்றதற்பின்
மெய்யையுய்யக்கொண்டார்சீர்த்தேவியாரும்விதிவசத்தால்
வையமிரங்கவுடறவிர்ந்துபரமபதத்தைமன்னினார். (௧௨௯)

வேறு

சீரமருமவர்வயிற்றிற்செனித்தவராம்பெண்பிளைக
ளோரிருவருளரவர்க்குமுறுதுணையாய்வளர்த்தெடுத்துத்
தாரமிழந்தவரிறையுஞ்சலியாதபடிமடத்தித்
பாரமனைத்தினையுந்தான்பரித்தெடுத்துநடத்தினார். (௧௩0)

வேறு

வையமுழுதுந்தொழுதேத்துமணக்கானம்பியங்கொருநாள்
உய்யக்கொண்டார்கன்னியரையுடனேகொடுபோய்நீராட்டித்
துய்யபரிசில்வருநெறியில்வாய்க்காற்சேறுதோன்றிடலும்
பையநடமினெனக்கவிழ்ந்தோர்பாலமாகத்தான்படுத்தார். (௧௩௧)

ஆங்கதுகண்டுநின்றாராசிலாமணக்கானம்பிக்
கீங்கிதோர்நினைவுதோன்றியிருந்தவாறென்னேயென்னப்
பாங்குடனுய்யக்கொண்டார்க்கித்திறம்பகர்ந்தார்கேட்டுத்
தாங்கியுமகிழ்ச்சிபொங்கத்தனயனைத்தழுவிக்கொண்டே. (௧௩௨)

நோக்கிகின்போலேமுன்புநோற்றநோன்படியாய்த்தோன்றும்
பாக்கியவாளரிந்தப்படிமிசையொருவரில்லை
யார்க்கிதுகூடுமோசானடித்தொழில்பிடித்துநிற்கும்
மார்க்கநந்திருமால்மார்க்கமற்றிலைமணக்கால்நம்பி. (௧௩.௩)

வேறு

ஆதலினுலினியுனக்கென்னுருயிரையுய்க்கொண்ட
நாதமுனியெனக்களித்தநாரணன்சீருள்முழுதும்
ஓதுகின்றேன்கேளென்னவுய்யக்கொண்டாருவந்து
போதித்தார்நாதமுனிதமக்குரைத்தபொருளென்ன. (௧௩.௪)

[உய்யக்கொண்டார் திருநாடலங்கரித்தது]

மலமறுமணக்கானம்பிவசத்தினின்முழுதுநல்கிச்
சிலபகல்செல்லுநாளிற்சிரியவுய்யக்கொண்டார்
புலவர்கள்வணங்கியேத்தும்பொருவறும்வீட்டுக்கேக
நிலமிசையடியர்க்கெல்லாம்நினைவினுற்பயனைஞ்சொன்னுர். (௧௩.௫)

ஆங்குறுமடியாரெல்லாமழுதழிந்திரங்கும்வேலை
யேங்குநம்மணக்கானம்பியெந்தைநீயேகினுற்பின்
னேங்குநந்தெரிசனத்தையுறைப்புடனடத்தவல்லார்
ஈங்குளார்யாவரென்றுனெந்தைகேட்டியம்பலுற்றுன். (௧௩.௬)

மற்றுனக்குரைக்கின்றேன்கேள்மாசற்றமணக்கானம்பி
யுற்றுநம்பக்கற்சேர்ந்தமுதலிகளோடுமொன்று
யற்றுநீதானேயிந்தத்தெரிசனத்ததிபனுகி
நிற்றிகேள்கெநொட்பின்னிக்கீணிலந்தன்னில்வைகும். (௧௩.௭)

மாசில்சொட்டைக்குலந்தன்னின்மன்னுநாதமுனிமகனுர்
தேசுபொலியுமீச்சுரமாமுனிவன்றனக்கோர்திருமகனம்
மீசனருளால்வந்துதிப்பர்யமுனைத்துறைவரவர்நாமம்
பேசுமந்தப்பாலகனித்தெரிசனத்தைப்பெருக்கிடுவான். (௧௩.௮)

அந்தப்புதல்வன்றனக்குள்ளபரமார்த்தங்களனைத்தினையுஞ்
சிந்தைகூர்ந்துகட்டுரைத்தியெனையேசெப்பச்சொலிப்போனுன்
எந்தைநாதமுனிமுன்னமெனக்குக்கூடிற்றிலையவைகள்
பந்தங்கடிந்தநீயேநானதனுலதனைப்பகரென்ன. (௧௩.௯)

உரைத்துமேலைவைகுந்தத்துற்றுருய்யக்கொண்டாரும்
இரைக்குந்துன்பப்பெருங்கடலின்மணக்கானம்பியிழிந்தலற

நிரைக்குமற்றமுதலிகடாந்தேற்றத்தேறிநிகரில்லான்
விரைக்கோகனகத்திருத்தாரானுடம்பைவேதவிதிப்படியே. (௧௬௦)

பள்ளிப்படுத்துச்செய்கடன்கள்பலவுஞ்செய்திவ்வுடறனைத்
தள்ளித்தானுஞ்சென்றிடுவான்சரணம்புகுவான்றிருமனதி
லுள்ளிமணக்காநம்பியிந்தவுலகத்திருக்கும்வாழ்க்கையினை
யெள்ளியிருந்தான்றனைப்பொதிந்தபாகவதர்கள்குழாத்திடையே. (௧௬௧)

[ஆளவந்தாரவதாரம்]

அப்படியேசிலபகல்சென்றற்றளவிலாங்கொருநாள்
ஒப்பரியவீச்சுரமாமுனிவரனுக்குலகுய்ய
முற்பகலிற்பாகவதர்செய்ததவமுதிர்ச்சியினாற்
செப்பமிகுமொருபுதல்வன்றிருவவதாரஞ்செய்தான். (௧௬௨)

வேதமருந்தமிழ்செய்தமெய்ஞ்ஞானமகிழ்மாறன்
பாதமலர்தொழுதுய்ந்தநாதமுனிபணித்தபடி
மாதவஞ்செயீச்சுரமாமுனிவரனம்மதலைதனக்
கோதுமியமுனைத்துறைவரெனுநாமமுவந்திட்டார். (௧௬௩)

பன்னரியமறைமுடிவிற்பரம்பொருளைப்பாருலகின்
மன்னுமுணர்வுடையவர்களறிந்துய்யமாறனைப்போற்
றன்னுணர்விற்பொருடெரிந்துசாற்றவல்லதனயனுக்கங்
கின்னமுதமறைவிதியிலருந்துவித்தாரீன்றெடுத்தார். (௧௬௪)

வேறு

காத்திரமெடாதவண்ணங்கண்ணனைக்கருதுஞான
நேத்திரம்பெற்றுநெஞ்சநெகிழ்ந்துநீராளமாகித்
தோத்திரமருளிச்செய்வான்றோன்றியமதலைக்காங்கே
சாத்திரம்விதித்தவண்ணஞ்சவுளமுந்தாக்கச்செய்தார். (௧௬௫)

[ஆளவந்தார் வேதாதிகளை அதிகரித்தது]

அப்பருவங்கடந்ததற்பினந்தணர்கள்பலர்கூடி
யொப்பரியபாலகனுக்குபநயனம்பண்ணுவித்தார்
செப்பமிகுமறைமுதலாஞ்சிறந்தவருட்கலையனைத்தும்
தப்பறவாங்கோதுகின்றபருவத்தத்தனையான். (௧௬௬)

வேறு

வினையறக்கற்றுங்கோதுவிக்கின்றவேதியனறிந்தவையனைத்து
நினைவினிலொருகாலோருருக்கேட்டுநெஞ்சினின்முழுதையுந்தரித்து

மனையினிலிருந்தானேதுதறவிர்ந்துமைந்தவீங்கிருந்ததென்னென்னத்
தனையனோடுரைத்தான்றாதைமற்றவனைநோக்கியத்தனையனீதுரைக்கும். (௧௪௭)

எந்தைகேள்யான்முன்னேதினவிடத்தையின்னுமோதென்றெனிலிசைத்தான்
அந்தணனதனாலடியனேனகத்திலிருந்தமையென்றனனதுகேட்
டிந்தமாநிலத்திலிவனனையார்மற்றியாரெனவிசைத்துளமகிழ்ந்தான்
தந்தையுமுலகத்தவருமத்திறங்கேட்டிவனொருதனிமுதலென்றார். (௧௪௮)

[ஆளவந்தார் ஆக்கியாழ்வானை வென்றது]

அப்படிச்செல்லுநாளினிலொருநாளாசறுமியமுனைத்துறைவர்
ஒப்பில்மாபாஷ்யபட்டரோடனைத்துமோதுவாரோதுமந்நாளிற்
செப்பமாருலகமுழுதுமாள்கின்றசெம்பியன்வாசலிற்புலவன்
றப்பிலாநெறிசேராக்கியாழ்வானென்றொருவனித்தரணியிலுயர்ந்தோன். ()

ஆங்கவன்றனக்குத்தரணியிற்புலவரனைவருங்கரமிறுத்தடங்கி
யேங்கிமற்றவன்சொல்வழியினைப்பிழையார்யாவருமிருநிலமுழுதும்
தாங்குமன்னவனுமவன்பணிசெய்துதனக்கவன்குரவனாயவன்றன்
பூங்கழல்வணங்கிப்போதுவானந்தப்புலவன்மாவாக்கியபட்டன். (௧௫௦)

தங்கியதலத்திற்காத்தினுக்காளுமோலையுந்தடையறவிடுப்ப
அங்கவர்சென்றுபட்டனைவளைத்தாராக்கியாழ்வான்வலியுணர்ந்து
பங்கமில்லாமாபாடியபட்டர்படிமிசைச்சவிப்பொடும்படுத்தார்
பொங்கியகீர்த்தியமுனைத்துறைவர்பொருவிலாப்பூசுரனிடத்தில். (௧௫௧)

சென்றனர்பாடமிடும்படிகிடந்தசீரியோன்செய்திறமுணர்ந்திங்
கின்றுநீர்சலித்துக்கிடந்ததென்பொருட்டாலியம்புமத்திறத்தையென்றியம்ப
வொன்றொழியாமலாக்கியாழ்வான்கற்றுடையநூலனைத்தையுமோதி
யென்றுமற்றவனுக்கிறையிறுத்திருப்போம்யாங்களென்றிசைத்தவனின்றும். ()

சீட்டுவிட்டென்னைமறித்தனனிறைக்கச்சிலுகினாற்சலித்தமையென்றான்
வாட்டமில்புகழ்சேரியமுனைத்துறைவர்மற்றவருரைத்தமையனைத்துங்
கேட்டுறவிருந்ததுதரைநோக்கிக்கேடிலாவாக்கியாழ்வான்ற
னீட்டினைவாங்கிக்கிழித்தொருகிரந்தமெழுதிநீரிதையவன்கரத்தில். (௧௫௩)

விரைவினிற்கொடுபோய்க்கொடுமெனக்கொடுத்தாரதின்பயன்விளம்பிடினுங்கள்
தரைமிசைத்தனியேகவிஞருமன்றுசாத்திரபாடருமன்றிங்
குரைசெயுமிடத்திலாயினுமெதிர்த்தபுலவராமுறுமதக்களிற்றைப்
புரையறப்பிளக்குஞ்சிங்கமாயிருப்போம்புலவனீயறியெனும்பொருளால். (௧௫௪)

தூதுவர்கொடுபோயோலையைக்கொடுப்பத்துணுக்கமுற்றாக்கியாழ்வானு
மேதிவன்பாலனிவனொருபுலவனிருந்தனனோவிருநிலத்தி
லோதுமினென்னவோலைவாசகத்தாலுண்ணடுக்கெய்தியங்குடனே
பூதலத்தரசனிடத்தினிற்செறிந்திப்புதுமைகளனைத்தையும்புகன்றான். (கடுடு)

அன்னவாசகங்கேட்டரசர்கோனிருந்தவாக்கியாழ்வான்முகநோக்கி
யென்னிதற்கினிமேல்வேண்டுவதென்றானெலையறுகலைகள்வல்லானும்
மன்னவவென்றனனோலையைக்கிழித்தான்மற்றவனெளியனன்றவனைப்
பொன்னவிர்முடியாயழைத்துநின்முன்னேபுலவர்கள்புவியுளோர்காண. (கடுசு)

வாதினிலவனையென்னுடன்விடுத்தால்வென்றவர்மன்னமற்றிந்தப்
பூதலத்தொருவனென்றறிந்திடலாமென்றனன்புலவன்மன்னவனு
மோதினைநலனென்றோலையுமாளுமோங்குசீரியமுனைத்துறைவர்
போதுகவிரைவிலென்னும்வாசகத்தாற்போக்கினன்றூதுவர்புகுந்தார். (கடுஎ)

சென்றுதூதுவர்களரசர்கோன்விடுத்ததிருமுகமிதுவெனக்கொடுப்ப
நன்றெனவாங்கிவாசகமுணர்ந்துநடுவுறக்கிழித்திதைக்கொடுபோ
யின்றுமன்னவனுக்கிடுமெனக்கொடுத்தாரியமுனைத்துறைவர்மற்றவரு
மொன்றியவெகுளிதலைக்கொளக்கொடுபோயோலையைக்கிழித்தமையுரைத்தார்.

அரசர்கோனோலைகிழித்ததில்வெகுளவாங்கவன்மனைவியர்தமிலோர்
விரைசெறிகுழலாள்மன்னவயார்க்கும்மேலவனிவ்வணஞ்செய்தான்
றரைமிசைநடவானாக்கியாழ்வான்றன்றலைமிசைமிதிக்கவும்வல்லா
னிரைமணிச்சிவிகைகொடுத்துநீவிடுத்தால்நிகரிலான்வருமெனநிகழ்த்த. (கடுகூ)

மன்னவனதுகேட்டாக்கியாழ்வானைவாதிடைவெல்லவல்லவர்கள்
இந்நிலத்திலையாங்கவன்வெல்லிலிராச்சியம்பாதியுமீவேன்
அன்னமென்னடையாய்மற்றவன்றோற்கிலதற்குநீசெய்திறமறைதி
யென்னமன்னறையநாய்க்கெரித்திட்டங்கிருப்பதென்பணியெனவிசைத்தாள் ()

அப்படிசெய்யக்கடவதென்றரசனணிமணிச்சிவிகையுமாளுந்
தப்பறவிடுப்பவியமுனைத்துறைவர்சராசரந்தொழுதெழவேறி
யிப்படிவாழவேகினாரேகியிருநிலமுழுவதுமாளு
மொப்பறுமன்னரசுவீற்றிருக்குமோங்குமாமண்டபமணைந்தார். (கசுக)

மண்டபஞ்செறிந்தாங்கியாவருந்துதிப்பமன்னனும்வழிபடவிருந்தா
ரண்டரும்புகழுமொருசுலோகத்தையக்கணத்தெழுதியப்பொழுதே
விண்டலமளப்பவோங்குகோபுரத்தின்விளங்குசீர்வாசலிற்றூக்கி
யுண்டெனிலழைமினெனவினிதிருந்தாரதின்பயனுள்ளவாறுரைப்பாம். (கசுஉ)

மன்னவர்மன்னுவென்னுடன்றர்க்கவாதமதுரைக்கவல்லாரை
மின்னவிர்சடையான்றேவியைப்பெற்றுவிளங்குசீரிமயமால்வரைக்கு
மன்னமென்னடையாள்சானகிமகிழவரக்கர்களாருயிர்குறைய
முன்னிறையடைத்தசேதுவினளவும்முதியநான்மறையவரிறைஞ்ச. (௧௬௩)

ஆதவனுதிக்குமாமலைதனக்குமத்தமனக்கிரிதனக்கு
மோதுசீர்நடுவாயுள்ளவிப்புவியிலோங்குமீமாங்கிதையுரைப்பி
லேதமற்றொருவரென்னையொத்தவர்களுண்டெனிலீங்கழையென்னப்
போதமிக்குடையார்தூக்கியசுலோகப்பொருளிதென்[illegible]ர்பெரும்புலவர் (௧௬௪)

ஆங்கதுகேட்டவாக்கியாழ்வானுமாசன்முன்னணைந்தனனுலகைத்
தாங்குமன்னவனுமியமுனைத்துறைவீர்தர்க்கியுமிவருடனென்ன
வோங்கியபுகழ்சேரியமுனைத்துறைவரொருவர்வென்றொருவர்தோற்றிட்டாற்
பாங்குறவறியும்புலவர்கள்பலரைப்பார்த்திபவழையெனப்பகர்ந்தார். (௧௬௫)

நன்றெனமன்னனுனிலத்துள்ளநவையறுபுலவரையழைப்பச்
சென்றனர்பலரும்மன்னனும்மன்னன்றேவியுஞ்சீர்பெறநோக்கி
யன்றிருந்தருளவாக்கியாழ்வானுமாசறுமியமுனைத்துறைவ
ரென்றுரைத்தருளுமெம்பிரான்றானுமெதிர்ந்தனரெதிர்ந்தவப்பொழுதே (௧௬௬)

ஆக்கியாழ்வானைநோக்கியாங்கிருந்தவாசறுமியமுனைத்துறைவர்
வாக்கியோகல்விமுதுமையோபுதுமைவரிக்கொடும்பியைவளர்த்தோய்
தூக்கிநீயுரைத்தியப்புறமுனக்குச்சொல்லுவன்மறுமொழியென்றான்
கோக்குலமன்னன்குருக்களாயிறுமாந்திரு[illegible]தவக்கொடியவன்பகர்வான். (௧௬௭)

கல்வியிற்கவியில்மற்றுளகலையிற்காட்டியதுறைதுறைக்கெல்லாம்
வல்லவன்யானீயாமென்றதொன்றையன்றெனவருத்துவேன்மதலா
யல்லவென்றவையையாமெனவிருந்தவந்தணர்சிந்தையுண்மகிழ
மல்லுயர்தோளான்மன்னவன்மகிழவருத்துவேன்வாய்திறவென்றான். (௧௬௮)

என்னையாளுடையவியமுனைத்துறைவாத்திறங்கேட்டுறநகைத்திங்
குன்னையீன்றெடுத்தாள்மலடியன்றாசனேங்குசீர்ச்சாருவபூம
னன்னையாமிந்தமன்னவன்றேவியாசறுகற்புடையணங்காம்
பின்னைநாமப்பாற்பேசலாமிந்தமூன்றையும்[illegible]கியென்றறைந்தார். (௧௬௯)

ஆங்கதுகேட்டவாக்கியாழ்வானுமவுனியாயாருயிர்பதைப்ப
வேங்கியங்கிருந்தான்மன்னவன்புலவர்யாவருமியமுனைத்துறைவர்
பூங்கழல்வணங்கியிருந்தனர்பின்னுமிருந்தவப்புலவர்கள்சபையி
லோங்கியகுணத்தாரியமுனைத்துறைவர்பின்னுமாங்கவருடனுரைப்பார். (௧௭௦)

சாத்திரங்களிலேபுகுதவல்லாயேற்றருவனானிடமெனச்சாற்றப்
பாத்திருந்தவனுமாங்கதற்கிசைந்துபலகலையாகமப்பரப்பில்
நேத்திரமிரண்டுமுடையவனெதிரேநிலையறவவையிலாவொருவன்
சூத்திரநடனம்பயிற்றிடுவதுபோற்றுணிந்தவன்சிலசிலசொன்னான். (களக)

அப்படிதம்மில்வாதுசெய்பொழுதிலாக்கியாழ்வான்முகநோக்கி
யொப்பிடவரியவியமுனைத்துறைவருரைப்பரோர்சபதமேதென்னிற்
செப்பமார்நெறிசேருத்தமங்கலங்குஞ்சிந்தையாய்மத்திமமதம்
மிப்படிமூன்றுதிறத்தினிலொன்றில்யாவரேவெல்பவரவர்கள். (களஉ)

தோற்றவர்தலையிற்றாடனம்பண்ணத்துணிந்துநாம்புரிகுதும்வாதை
யேற்றுநீமுதலாமூன்றுவார்த்தையிலுமிசைத்திடுமஞ்சுவார்த்தையிலு
மாற்றல்மிக்குளதேலேழுவார்த்தையிலுமொன்றினீயறிந்தெனைவென்றா
லூற்றமிக்குடையாய்வெற்றியுன்னதுவாமென்றனனொப்பிலாநெறியான் (களங)

அத்திறஞ்செய்வேமென்றதற்கிசைந்தானாக்கியாழ்வானுமீதுரைத்த
மெய்த்திறமுடையார்மூன்றுவார்த்தையிலும்வென்றனரஞ்சுவார்த்தையிலுஞ்
சித்திரநெறிசேரேழுவார்த்தையிலுஞ்சிதைந்தனனாக்கியாழ்வானு
மித்திறங்கண்டவரசர்கள்புலவரியமுனைத்துறைவரைவியந்தார். (களச)

எந்தையென்னுயிராமியமுனைத்துறைவரிழுக்குறுமாக்கியாழ்வானை
முந்தநாஞ்சபதம்பகர்ந்துளோந்தோற்றாய்முடிமன்னன்குருவுமாய்மேலா
மந்தணனாய்த்தாடனம்பண்ணேனாக்கியாழ்வானிளகென்றான்
சிந்தைநொந்தவனுமெழுந்தொருமருங்கிலிருந்தனன்யாவருஞ்சிரிப்ப. (களரு)

ஆளவந்தாரோவென்னையின்றென்னவளவறுகாதலோடெழுந்து
வாளெனும்விழியாள்மன்னவன்றேவிமைந்தனைமகிழ்வொடுமெடுத்து
மீளவங்கிருந்ததலத்தினிற்கொடுபோய்வேண்டுவதளித்தவள்விடுப்பத்
தாளிணைபிடித்துமன்னவனுலகிற்பாதியுந்தந்தனனென்றான். (களசு)

புலவலர்களிறைஞ்சிப்பிரமாதத்திற்பொன்னுலகவர்தொழவேற்றி
மலமறுகுணத்தாய்வாழியென்றேத்தமன்னவனுலகினைப்பகுந்து
குலமுதல்மயிலையாளவந்தாருங்கோதறுபுலவர்களோடுஞ்
சிலபகலரசனாயிருந்தருளித்திருக்கலியாணமுஞ்செய்தார். (களஎ)

[தொடரும்.]

உதவிப்பத்திராதிபர்.

மாட்சிமைதங்கிய புதுக்கோட்டை மகாராஜா

மார்த்தாண்டபைரவத்தோண்டைமான் பஹதூர் அவர்கள்.

அநுதாபக்குறிப்பு.

புதுக்கோட்டைஸமஸ்தானத்து மன்னர்பெருமானுன மார்த்தாண்ட பைரவத்தோண்டைமான்பஹதூரவர்கள் சென்ற மேமீ 28௨ திங்கட் கிழமையன்று இவ்வுலகவாழ்க்கையைத்துறந்தனரென்னுஞ்செய்தி தமிழ் நாடனைத்தையும் ஒருங்கே கவலைக்கடலில் ஆழ்த்திவிட்டது. தமிழ்நாட்டு வேந்தராய்த்தோன்றித் தாய்மொழியைப் பேணிவளர்த்த பெருந்தகையாளராய் விளங்கிய இவர், இற்றைக்கு ஐம்பத்திரண்டாண்டுகட்குமுன்னர் (1875ம்ஸூ) அப்பொழுது புதுக்கோட்டையில் அரசுரிமைவகித்த மாட்சிமைமிக்க இராமச் சந்திரத்தோண்டைமான்பஹதூரவர்களின்சந்ததியில்வந்தவர். இவர் இளமையிலேயே செந்தமிழ்க்கல்வியும் வடமொழிப்பயிற்சியும் செவ்விதின் நிரம்பப்பெற்றுவிளங்கினர். சித்திரம்வரைதல் முதலிய கைத்தொழிற்கலையிலும் இவர் மிகுந்த தேர்ச்சியுற்றிருந்தனர். பின்னர் கேம்பிரிட்ஜ்சர்வகலாசாலைப் பட்டம்பெற்ற கனம் எப். எப். கிராஸ்லி என்னும் ஆசிரியரொருவரிடம் இவர் எழெட்டுவருடம் ஆங்கிலகலைகளும் அப்பியசிக்கலானர்.

நம்மதுரைத்தமிழ்ச்சங்கஸ்தாபனத்துக்குக்காரணபூதராயும்பரமோதார ராயும் விளங்கிய ராஜா. M. பாஸ்கரஸேதுபதியவர்களது விருப்பத்திற் கிணங்கி இவர் இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தினிடம் பேராதரவுபூண்டு அதற்கு நிரந்தரபோஷகராய்த் தம் ஸமஸ்தானத்தினின்று என்றென்றும் பொருளுதவி புரியவாக்களித்திருப்பது ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று. இவர் ஒரு சமயம் மொத்தமாக ரூபா ஐயாயிரம் இச்சங்கத்திற்கு நன்கொடையளித்தார். அதுமட்டுமன்றி 1904-ம் ஸூ அக்டோபர்மீ முதல் மாதந்தோறும் ஐம்பது ரூபா வீதம் சங்கமுள்ளளவும் தம் ஸமஸ்தானத்தினின்று தவருது பொருளுதவி புரிந்துவரக் கட்டளையிட்டிருக்கிருர். அதன் ஞாபகார்த்தமாகவே தமிழ்ச்சங்கப் பரீக்ஷைகளில் முதற்பரிசுபெறும் மாணவர்களுக்குப் **புதுக்கோட்டைமஹாராஜா அவர்கள்பரிசு** என்ற பெயருடன் சங்கத்தார் சம்மானம் வழங்கிவருகின்றனர்.

இன்னும், நவராத்திரி உத்ஸவகாலத்தில் தமிழ்ப்புலவர்களுக்கும் வடமொழி வாணர்களுக்கொப்ப அவரவர் தகுதியறிந்து புதுக்கோட்டையரசாங்கத் திற் சம்மானமளித்துவருவதும் இவர்களரசாட்சிக்காலத்திற்றேன்றியதேயாம்.

ஆகவே, இத்தகைய நன்றிகளை என்ஞான்றும் நினைவினுட்கொண்ட நம் தமிழ்மக்களிடையே இம்மார்த்தாண்ட பைரவ மஹாராஜா அவர்கள் விண்ணுல கடைந்தனரென்றசெய்தி எத்துணைத்துன்பமளிக்கவல்லதென்பது சொல்லுந் தரத்ததோ. அன்னரின் பிரிவாற்ருதுவருந்தும் அவ்வரசகுடும்பத்தினரிடத்து நாம் மிக்கஅநுதாபம் காட்டுவதன்றி வேறென்செய்யத்தக்கது?